35

Thanjavur Sarasvati Mahal - Series No. 379

॥ ஸ்ரீ : ॥

SRIMADVIKHANASOTPATTICARITRAM

ஸ்ரீமத்விகனஸோத்பத்தி சரித்ரம்

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

1997 Price Rs.11.00

Thanjavur Sarasvati Mahal - Series No. 379

॥ श्रीः ॥

श्रीमद्विखनसोत्पत्ति चरित्रम्

SRIMADVIKHANASOTPATTICARITRAM

Edited by
Nyayasiromani
S. SUDARSANAN, M.A.,
Sanskrit Pandit
Sarasvati Mahal Library, Thanjavur.



THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

1997

Price Rs.11.00

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	: SRIMADVIKHANASOTPATTICARITRAM
Editor	: S. Sudarsanan
Publisher	: Director Sarasvati Mahal Library
Publication No.	: 379
Language	: Sanskrit
Edition	: I Edition
Date of Publication	: October 1997
Paper Used	: 13.7 Kg. Seshasayee
Size of the Book	: 21 x 14
Printing type used	: 10 Point
Number of Pages	: 75
No. of Copies	: 500
Price	: 11.00
Printer	: Topline Off-Set Press, Thanjavur.
Binding	: Card Board
Subject	: History (Based on Sastras)

பொருளடக்கம்

	பக்கம் எண்கள்
பொருள்	
கலைச்சொற்கள் (முகவுரை)	i -- iii
முகவுரை	iii -- viii
பரீட்சைக்கான வேலைத்திட்டச் சித்திரம் (ஸ்ரேணி முதலாம்)	1 -- 18
பரீட்சைக்கான வேலைத்திட்டச் சித்திரம் (தமிழ்)	1 -- 111
பரீட்சைவினாக்கள் சித்திரம்	112-231
பரீட்சைவினாக்கள் பதிற்றுப்பத்தந்தாதி	232-444

"வெளியீட்டாளர் முகவுரை"

இந்தியத்திருநாட்டின் ஆன்மீக நெறிமுறைகளை ஆன்றோர்கள் வகுத்துள்ளனர். இவற்றில் இந்துமதம் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு ஒழுகுவதாகும். இது வேற்றுமையில் ஒற்றுமை காண்பதர்கும். இதனை அறுவகை நெறிகளாகக் கொண்டு ஒழுகினர். இவற்றைச் சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம், ஸௌரம் என வகுத்தனர்.

வைணவம் என்பது திருமாலை முதன்மையாகக் கொண்டு வழிபடுவதாகும். இதில் இரண்டு பிரிவுகளுண்டு. அவை ஸ்ரீவைகானஸம், ஸ்ரீபாஞ்சராத்ரம் என அழைக்கப்படுகின்றது. இதில் "ஸ்ரீவைகானஸ ஆகமமே காலத்தால் முந்திய பழஞ்சிறப்புடையது" என்பது ஆராய்ச்சியாளர்களின் கொள்கை. ஸ்ரீவைகானஸ ஆகமநெறிமுறைப்படி வழிபாடு செய்யப்பெற்று வரும் புகழுபெற்ற ஆலயங்கள் தமிழகத்தில் அதிகம். இந்த ஆகமத்தை நெறிப்படுத்தியவர் "விகனஸர்" என்ற பெரியார். இவருடைய வாலாற்றை ஸம்ஸ்கிருத மொழியில் தாங்கிய ஓலைச்சுவடியிலிருந்து இந்நூல் தற்போது அச்சில் வெளிவருகிறது.

அரிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு திகழும் தஞ்சாவூர் மாமன்னர் சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்திலிருந்து வெளிவரும் இந்நூலைப் பதிப்பித்தவர் நூலக வடமொழிப் பண்டிதர் திரு. எஸ். சுதர்சனன் அவர்கள். இந்நூலில் விகனஸரைப் பற்றியும், அவர்மீது இயற்றப்பட்ட பதிற்றுப் பத்தந்தாதியும் மற்றும் இம்மரபைத் தழுவியவர்கள் பற்றிய செய்திகளும் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளமை அனைவரும் படித்துப் பயனடையத்தக்கதாகும். இந்நூலினைச் செம்மையுறப் பதிப்பித்துள்ள வடமொழிப்பண்டிதர் திரு.எஸ்.சுதர்சனன் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்நூல் நல்லமுறையில் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதிமகால் நூலக நிருவாக அலுவலர் திரு. ப. சுப்ரமணியன் அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு.அ.பஞ்சநாதன் அவர்களுக்கும் இதனைச் செம்மையாக அச்சிட்டுத்தந்த தஞ்சாவூர் டாப்லைன் ஆஃப்செட் அச்சகத்தாருக்கும் எனது உளங்கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

"ஸ்ரீமத்விகனலோத்பத்திசரித்ரம்" என்னும் இசசரித்திரநூல் சாஸ்திரங்களை ஆதாரமாகக் கொண்டு ஆய்வுசெய்யும் மாணவர்களுக்கும், திருமால் வழிபாட்டில் ஸ்ரீவைகானஸம் என்ற பிரிவின்பால் ஈடுபாடுடையவர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பது திண்ணம்.

தஞ்சாவூர்
30.10.97

து. நா. இராமநாதன் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

ஸ்ரீ:

முகவுரை

"அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சாசரம்/
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: // "

வேதம் என்பது அனாதியானது. இந்த அனாதியான வேதமானது பிற்காலத்தில் வ்யாஸரால் நான்காகப் பிரிக்கப்பெற்றது. அந்த வேதங்களை கர்மகாண்டம், ஞானகாண்டம் என்னும் இருபெரும் பிரிவுகளாகப் பகுப்பர் சான்றோர். (அதாவது வேதத்தின் முற்பகுதி கர்மகாண்டம் அதன் இறுதிப் பகுதி ஞானகாண்டம் அல்லது "வேதாந்தம்" என்பதாகக் கூறுவர்). கர்ம காண்டத்தில்தான் யாகங்களை எப்படி செய்வது? அதற்கு வேண்டிய த்ரவ்யங்கள் (சாமான்கள்) என்ன? என்பது பற்றிய விஷயங்கள் அனைத்தும் பேசப்படுகிறது. இவ்வாறு செய்யப்படும் யாகங்களும் ஒருவித அர்ச்சைகளில் அடங்கும் அவ்வித அர்சைகளில் ஒன்று அமூர்த்தார்ச்சனம். இவை யாகங்களின் மூலம் செய்யும் அர்ச்சனையில் அடங்கும். மற்றொன்று ஸமூர்த்தார்ச்சனம்.

ஸமூர்த்தார்சனம் (விக்ரஹவழிபாடு)

" அர்ச்சாவதார ரூபேணலோகேஸ்மிந் சதுரானன /
அவதாரம் கரிஷ்யாமி ஹரியா லக்ஷ்ம்யா ஸமந்வித: // "

என்ற ஸ்லோகத்தின்படி உலகிலுள்ள மக்கள் அனைவரையும் உய்விக்க எண்ணி பகவான் ஸ்ரீமந்நாராயணண் கருணையுடன் பூலோகத்தில் அர்ச்சாவதாரம் (சிலைவடிவாக) செய்ய ஸங்கல்ப்பிக்கிறார். அது சமயம் அங்கு இருந்து ரிஷிகளைப் பார்த்து தமது திருவாராதனை கைங்கர்யத்தை ஏற்குமாறு கூறுகிறார். சரியான உத்தரம் கிட்டப்பெறாததால் தானே விகனஸரை ஸ்ருஷ்டித்து அவருக்கு அனைத்து உபதேசங்களையும் செய்விக்கிறார். இவ்வாறு இந்த ஸ்ரீவைகானஸ ஆகமமானது பகவான் ஸ்ரீமந்நாராயணனிடமிருந்து ஸாக்ஷாதாக உபதேசித்துப் பெறப்பெற்றது.

இந்த ஸ்ரீவைகானஸ ஆகமத்தின் வளர்ச்சி

பகவான் ஸ்ரீமந்நாராயணண்விகனஸரை ஸ்ருஷ்டித்து உபேதச ரூபமாக அனுக்ரஹித்தார் - போல - விகனஸரானவர் ப்ருகு, அத்ரி, வஸிஷ்டர், மரீசி, காச்யபர், ஜமதக்னி, பரத்வாஜர், விச்வாமித்ரர், கௌதமர் போன்ற ரிஷிகளை ஸ்ருஷ்டித்து அனைவருக்கும் தான் பெற்ற மந்த்ரங்கள் அனைத்தையும் (1 1/2 கோடி க்ரந்த ஸங்க்யையையும்) உபதேசித்தார். உபதேசமாகப்பெறப்பெற்ற

இந்த மந்தரங்களுக்கு ஸ்ரீவைகானஸாகா என்று பெயர். விகனஸரால் உபதேசமாகப் பெறப்பெற்ற சாகைக்கு "ஏகாயனீசாகா" என்று பெயர். இரண்டும் ஒன்றே என்பது ஸ்ரீவைகானஸ குல ஸ்வாமிகள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அப்படிப்பட்ட இந்த ஸ்ரீவைகானஸ சாகை மிகவும் (அதிகமானது) விஸ்தாரமானது என்பதாகவும் மனுஷ்ய ஆயுள் மிகவும் (குறைவானது) சுருங்கியதானது என்பதாகவும் அறிந்த பகு அத்ரி, காச்யபர், மரீசி ஆகிய நால்வரும் இந்த 1 1/2 கோடி க்ரந்த சங்கியையைச் சுருக்கி நான்கு லக்ஷமாகக் கூறினார்கள். இவ்வாறு விகனஸாசார்யனிடமிருந்து இந்த ஸ்ரீவைகானஸ ஆகமமானது ஸ்ரீவைகானஸர்களுக்கு கிடைக்கப்பெற்றது.

ஸ்ரீ வைகானஸம் என்னும் இந்த ஆகமமானது பல சிறப்பம்சங்களை உடையது (1) மிகப்பழமையானது (2) வேதத்தை பிரதானமாகக் கொண்டு விளங்குவது (3) பகவான் ஸ்ரீமந்நாராயணனிடமிருந்து நேராக ஸ்ரீமத்விகனஸாசார்யனுக்கு அனுக்ரஹிக்கப்பெற்றது (4) அன்ய ஸூத்ர அனபேமிதமானது (ஸ்வதந்த்ரமானது) போன்ற பல சொல்ல இயலும் இந்த ஆகமத்தை அனுஷ்டிப்பவர்கள் ஸ்ரீவைகானஸர்கள் என அழைக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீவைகானஸர்களின் பெருமை

பகவான் ஸ்ரீமந்நாரர்யணனின் வழித்தோன்றலான ஸ்ரீமத்விக்னஸாசார்யனின் வழிவந்தவர்கள் என்ற பெருமை ஸ்ரீவைகானஸர்களுக்கு மட்டுமே பொருந்தும். இந்த பெருமை மற்ற ஸூத்ரானுஷ்டாதாக்களுக்கு கிடையாது. இவர்கள் பகவான் ஸ்ரீமந்நாராயணனின் அர்ச்சா கைங்கர்யத்திற்காகவே ஏற்படுத்தப் பெற்றவர்கள். இன்றளவும் பல ஸ்ரீவைகானஸ குல ஸ்வாமிகளை இந்நிலையில் காணமுடிகின்றது. இந்த ஸ்ரீவைகானஸர்களைப் பற்றி புராண, ஆகம, ஸாஹித்யங்கள் தம்மிடையே ஆங்காங்கு தனது கருத்துக்களை தெரிவித்துள்ளன.

" வேதானாம் வ்யஸனாதர்வாக் ப்ராக்ரூபம் மிலிதந்து யத் /
தாந்து வைகான ம் சாகாம் இதி ப்ரம்ம விதோவிது: // '

வ்யாஸரால் தான் வேதம் நான்காகப் பகுக்கப்பெற்றது. அதற்கு முன்பு வேதம் அனைத்தும் (அதாவது இப்பொழுது நம்மால் சொல்லப் பெற்றுவரும் நான்கு வேதங்களும் முன்பு ஒன்றாகச் சொல்லப்பெற்றிருந்தது.. அது வைகானஸசாகை தான் என்பதாக மேற்சொன்ன ஸ்லோகத்தின் கருத்து தெரிவிக்கிறது.

மேலும் "சுருதீனாமாதி பூதாது சுருதிரேகாயனீ மதா" என்று ப்ரம்ம வைவர்த்த புராணமும்; "ஹிதாய ஸர்வபூதானாம் வேத பேதான் கரோதிஸ:! ஏக ஆ த்யஜஓர் வேதான்தம் சதுர்தாஹ்யகல்பயத்!" என்பதாக விஷ்ணு புராணமும் கருத்துக்கள் மேற்சொன்ன கருத்திற்கான முக்கியத்துவம் வலுப்பெறுகிறது.

வராஹபுராணமானது "அர்சமார்க, காராம்பக, துள, விகனஸர்" ஆகிய நான்கில் எனக்கு மிகவும் பிரியமானது "விகனஸர்" என்று பகவான் கூறியதாகத் தெரிவிக்கிறது. எனக்கு பூஜை செய்பவர்களும், ப்ரம்மவித்துக்களுமான வைகானஸர்களுக்கு அதிதி ஸத்காரத்தையும், தானங்களையும் செய்யுங்கள் என பகவான் கூறியதாக நாரத புராணம் கூறுகிறது.

கௌஷீதக கோத்ரத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று க்ராமங்களை அமைத்து அனைகளை மஹாத்மாக்களான ஸ்ரீவைகானஸர்களுக்கு அளித்தார்கள் என காருட புராணம் எடுத்துரைக்கின்றது. கூர்மபுராணம் என்னைப் பற்றி சிந்தித்துக் கொண்டும், எப்பொழுதும் என்னிடமே மனதை லயித்தவர்களாகவும், என் ஒருவனையே சரணாகதியாகவும் இருப்பவர்கள் வைகானஸர்கள், என் ஒருவனையே சரணாகதியாக உடையவர்கள் என்பதால் இவர்கள் ச்ரேஷ்டர்கள்" என்று கூறுகிறது. வைகானஸர்கள், பசுக்கூட்டம், பில்வம், பலாசம் ஆகியவை எங்கு இருக்கிறதோ அங்கு பகவான் ஸ்ரீமந்நாராயணன் இருக்கிறார் என்று புராணாந்தரங்கள் கூறுகின்றன. வைதிகர்களில் ப்ரம்ம நிஷ்டத்தை ஆசரிப்பவர்களான ஸ்ரீவைகானஸ ப்ராம்மணர்களைப் பார்த்த மாத்திரத்தில் பாபங்கள் அனைத்தும் தொலைகின்றன (அழிகின்றன) என்று வ்ருத்த யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதியானது பேசுகின்றது.

அதேபோல ஹாரிதஸ்ம்ருதியானது வைகானஸர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் ச்ரேஷ்டர்கள்; அவர்கள் (தேஹாந்தத்தில்) உயர்ந்ததான விஷ்ணுலோகத்தையே அடைகிறார்கள் என்பதாகக் கூறுகின்றது. பாஞ்சராத்ர பௌஷ்கரஸம்ஹிதையில் வைகானஸர்கள் என்று சொல்லப்படுபவர்கள் விஷ்ணு பக்தர்கள், ஏகாந்திகள், நல்லவர்கள் பலனை விரும்பாது பெருமாளுக்கு (கடமையைக்) கைங்கர்யத்தைச் செய்பவர்கள்" - எனவே தேஹாந்தத்தில் விஷ்ணுவுடன் இரண்டறக் கலக்கின்றனர்" என்று சொல்லப் பெற்றுள்ளமை போற்றத்தக்கதாகும்.

வைஷ்ணவர்களில் ஏகாயனீய சாகையை அத்யயனம் செய்பவர்கள் தான் முதன்மையானவர்கள் என்பதாக பாரமேச்வர ஸம்ஹிதையில் பதிமூன்றாவது அத்யாயத்தில் சொல்லப்பெற்றுள்ளது. வாஸிஷ்ட ராமாயணத்தில் பட்டாபிஷேகம் - செய்வித்ததால் சந்தோஷமடைந்த தர்மாத்மாவான ராமன் தனது பந்து ஜனங்களோடு வைகானஸ முனிவரை பூஜித்தார் என்பதாக சொல்லப்பெற்றுள்ளது. மேலும் பல ஆதாரங்கள் க்ரந்தாந்தரங்களில் காணக்கிடைக்கின்றது. நூலின் நிலைகருதி அவற்றை நிறுத்திக்கொண்டு; இவ்வரிய ஆகமத்தைத் தோற்றுவித்தவரான ஸ்ரீமத் விகனஸாசார்யனின் தோற்றம் பற்றி சற்று பார்ப்போம்.

விகனஸாசார்யனின் தோற்றம் (காலம்)

வேதத்திற்கு ச்ருதி என்பதாக ஒரு பெயருண்டு. காரணம் காதால் கேட்டு மனதில் பதியவைத்துக் கொள்ளப்படுவதால் அதற்கு அப்பெயர் வந்தது. காரணம் வேதகாலத்தில் எழுதிவைக்கும் பழக்கம் இல்லை. முன்னோர்கள் தமது வழியார்களுக்கு வாய்மொழியாக சொல்லிவைத்து காப்பாற்றப்பெற்று வந்தது தான் நாளடைவில் ஓலைகளிலும் ; கற்களிலும்; இலைகளிம் எழுதி காப்பாற்றப்பெற்று வந்தது. இந்த ஆகமமும் வேதகாலத்திலிருந்தே தோன்றி இருந்த வந்ததாக அறியமுடிகின்றது. "யேநகா; தே வைகானஸா: யே வாலா: தே வாலகில்யா:" என்று வேதவாக்யம் இருப்பதே மேற்சொன்ன கருத்திற்கு ஆதாரமாகத் திகழ்கின்றது. எனவே இந்த சாஸ்த்ரத்தைத் தோற்றுவித்தவாது காலமும் இவரது சாஸ்த்ரத்தில் சொல்லப்பெற்றுள்ள விஷயங்களிலிருந்தே (வாக்யங்களிலிருந்தே) அறிய முடிகின்றது. வாக்யம்:-

ஸ்வாயம்புவ மனோக் காலே யுகாதௌ சுக்ல வத்ஸரே!
ச்ரவணே ச்ராவணே சுக்ல பூர்ணிமா ஸோம வாஸரே!
ஸிம்ஹலக்னேன ஸம்யுக்தே விகனாத்ப்ராப நைமிசம்!!-

பொருள்:- ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில் க்ருதயுகத்தில், சுக்ல வருஷத்தில், ஆவணி மாதத்தில், ச்ரவண நக்ஷத்திரத்தில், திங்கட்கிழமையன்று நைமிசாரண்யத்தை அடைந்தார் என்று பொருள்படுகின்றது. அந்த வாக்யத்தையே ப்ரமாணமாகக் கொண்டு கணக்கிட்டோமாகில் நடப்பு ஈச்வர வருடம் (1997--1998) வரை சென்றுள்ள மொத்த வருடங்கள் நூற்றுத்தொண்ணூரத்தாறு கோடியே, என்பத்தைந்து லக்ஷத்து, மூவாயிரத்து தொண்ணூற்று ஏழு என்பதாக அறிய முடிகின்றது.

இந்த நூலின் சுவடி பற்றி

இச்சுவடி K.E. கோவிந்தன் என்பவரால் மதுராந்தகம் என்னும் ஊருக்கு அருகிலுள்ள கடுக்கலூர் என்னும் க்ராமத்திலிருந்து மறைந்த ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீநிவாச பட்டாச்சாரியார் ஸ்வாமியிடமிருந்து சேகரிக்கப்பெற்றதாகத் தெரியவருகிறது. இது 3.6.1974 அன்று Green No.1047 என்ற எண்ணில் (பதிவேட்டில்) பதிவாகியுள்ளது. இதில் எண்கள் 1--19 வரை குறிப்பிடப்பெற்றுள்ளது. ஆனால் நடுவில் 14ஆவது எண்ணிற்குப் பிறகு 16 என்பதாக குறிப்பிடப்பெற்றுள்ளது. நூல் தொடர்ச்சியாக இருப்பதாலும்; இதே சுவடியில் இந்த நூலுக்கு முன்னும் பின்னும் மேலும் இரு சிறு நூல்கள் சேர்ந்திருப்பதாலும் எண் குறிப்பிட்ட வகையில் தவறு நேர்ந்திருக்கலாம். என ஊகிக்க முடிகிறது. இச் சுவடி 35.5X3c.m. நீள அகலமுடையதாகவும் ஒரு சில ஏடுகளில் ஏழுவரிகளும் ஒருசிலவற்றில் எட்டு வரிகளும் எழுதப்பட்டுள்ளன. ஒரு வரிக்கு 40

முதல் 42 எழுத்துக்கள் உள்ளன. இதனை எழுதிய (நூலாசிரியர்)வர் தற்பொழுது கடுக்கலூர் க்ராமத்தில் வசித்து வரும் ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் ஸ்ரீ.உ.வே.சார்ங்கபாணி பட்டாச்சாரியார் ஸ்வாமியின் பிதாமஹர் என்பதாகவும், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு அதே க்ராமத்தில் வஸித்தார் என்றும் கூறப்படுகிறது. புத்தகத்தின் இறுதியடியின் மூலம் இவரது பெயர் பார்த்தசாரதி பட்டாச்சாரியார் என்றும் தெளிவாகிறது.

பல அறிய பெரிய நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துரைத்து இந்த விகனஸோத்பத்திசரித்ரம் என்னும் நூலை எழுதியிருப்பதன் மூலம் இவர் பரந்துபட்ட ஸம்ஸ்க்ருத புலமையும், ஆழ்ந்த குருபக்தியும் கொண்டவர் என உறுதி கொள்ள முடிகின்றது. "அர்ச்சகோ பார்த்த ஸுதேன" என்ற வாக்யத்தின் மூலம் அவர் பகவதர்ச்சனையையே ப்ரதானமாகக் கொண்டு வாழ்ந்திருக்கிறார் என்பதும் தெரியவருகின்றது.

இந்நூலில் நமது நூலகத்தில் ஸம்ஸ்க்ருத பிரிவில் க்ரந்த வரிவடிவத்தில் உள்ளது. இதனை தேவநாகரி வரிவடிவமாக மாற்றி பதிப்பிக்கப்பெற்றது. அடுத்து மரீசி மஹரிஷியால் ஆனந்த ஸம்ஹிதையில் சொல்லப் பெற்றுள்ள விகனஸோத்பதி சரித்ரத்தின் தமிழாக்கமும், 1920 ஆம் ஆண்டு "ஸ்ரீவைகானஸன் என்னும் இதழ் தொகுப்பிலிருந்து ஸ்ரீவைகானஸ சரித்திரமும், இறுதியாக இதற்கு தொடர்புடைய செய்தியாகிய

"ஸ்ரீ விகனஸாச்சார்யபதிற்றுப் பத்தந்தாதி" என்னும் தமிழ்ப்பாடலும் பிற்சேர்க்கையாக சேர்த்து பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

நன்றி நவிலல்

இவ்வரிய நூலினைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சியர் மற்றும் இந்நூலக இயக்குநர் உயர்திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப., அவர்களுக்கும்; இந்நூலக நிருவாக அலுவலர் திரு.ப.சுப்ரமணியன் அவர்களுக்கும்; இந்நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு.அ. பஞ்சநாதன் M.A.M.L.I.S. அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றேன். இந்நூல் வெளிவர மூலகாரணமான ஓலைச் சுவடியை மனமுவந்து இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய கடுக்கலூர் ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.மணிவண்ண பட்டாச்சாரியார் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலில் இடம்பெற்றுள்ள ஸ்ரீவைகானஸ சரித்ரம் என்னும் மாத ஸஞ்சிகைத் தொகுப்பை கொடுத்து உதவிய சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன் பாளையம் க்ராமத்தில் வசித்து வரும் ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் கௌண்டின்யம் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.ட.ஜெயராமன் அண்ணாமலை

பைன்ன்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் அவர்கள் குடும்பத்தினருக்கும்; மேலும் இந்நூலின் இறுதிப்பகுதியை தெள்ளுதமிழில் அலங்கரிக்கும் பதிற்றுப்பத்தந்தாதி சுவடியை படி எடுத்துக் கொள்ள மனமுவந்து அளித்த ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் ஸ்ரீமான் ஸ்ரீ உ.வே.ஓ.ச. வெங்கட்ராம அய்யங்கார் ஸ்வாமி அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறேன். இச் சுவடியை பொன்னேரி ஸ்ரீவைகானஸ ஆகம வித்வான் ஸ்ரீ உ.வே.கோபாலகிருஷ்ண பட்டாச்சாரியார் அவர்களின் மூலம் வாங்கி அளித்த சங்கேதந்தி Dr. S. முத்து, M.A. M.Phil., B.Ed., Nyaya Siromani M.L.I.S., அவர்களுக்கும், நூலகத்தின் சார்பில் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். இந்நூல் பிழையின்றி வெளிவர இந்நூலை நுண்ணாய்வு செய்தவரும்; ஸம்ஸ்க்ருத வ்யாகரண சாஸ்த்ர, ஸ்ரீவைகானஸ ஆகம வித்வானும்; அடியேனது ஆசார்யனுமான கடுக்கலூர் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.சௌரி.ஸ்தலசயன பட்டாச்சாரியார் ஸ்வாமி அவர்களுக்கு எனது ப்ரணாமவிசிஷ்டமான க்ருதக்ருதையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர உதவிய திரு ஆ. வீரராகவன், M.A.B.E.D., அவர்களுக்கும்; இதனை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த தஞ்சாவூர் டாப்லைன் ஆப்செட் பிரஸ் அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தஞ்சாவூர்.
தேதி - 31.10 97

ஸ்ரீ. சுதர்சனன்,
ஸம்ஸ்க்ருத பண்டிட்
சரசுவதி மகால் நூலகம்.

ஸ்ரீமத்விகனஸாசார்யன்

ஸ்ரீ லக்ஷ்மீவல்லபாரம்பாம் விகனோமுனிமத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

।।श्रीः।।

।।श्रीमद्विखनसमहागुरवे नमः।।

श्रीमद्विखनस्तोत्पत्ति चरित्रम्

ऋग्यजुस्सामाथर्वं इति लोके प्रसिद्धिः सर्वशाखा मूलभुतो यजुर्वेद इत्युक्तं, कथमिदमवगम्यते इति चेत् - उच्यते।

विष्णुपुराणे-

वेदद्रुमस्य भैत्रेयशाखा भेदाः सहस्रशः -
न शक्यो विस्तरो वक्तुं सङ्क्षेपेण शृणुष्व तम्।
द्वापरे द्वापरे विष्णुर्व्यासरूपी महामुने।
वेदमेकं सुबह्वो यो कुरुते जगतो हितः।
वीर्यं तेजो बलं चाल्पं मनुष्याणामवेक्ष्य च ।।
हिताय सर्वभूतानां वेदभेदान्करोति सः।
एक आसीत् यजुर्वेदस्तं चतुर्धा व्यकल्पयत्।
चतुर्होत्रमभूतस्मिन् तेन यज्ञमथाकरोत्।।
अध्वर्युं यजुर्भिस्तु ऋग्भिर्होत्रं तथा मुनिः।
औद्गात्रं सामभिश्चक्रे ब्रह्मत्वञ्चाप्यथर्वभिः।
ततः स ऋच उद्धृत्य ऋग्वेदं कृतवान् मुनिः।
यजूंषि च यजुर्वेदं सामवेदं च सामभिः।
राजास्त्वथर्व वेदेन सर्वकर्माणि स प्रभुः।
कारयामास मैत्रेय! ब्रह्मत्वं च यथास्थितः।
सोऽयमेको महान्वेदस्ततस्तेन पृथक्कृतः।
चतुर्धा च ततो जातं वेदपादपकाननम्।। इति।

"बहुशृङ्गं चतुस्सानुः पृथुलो वेदपर्वतः।" इत्यारभ्य वेदव्यासरूपिणा भगवता यदा व्यस्थाः पूर्वं एकरूपेण अवस्थितस्य वेदपर्वतस्य वैखानसशाखात्वेन प्रसिद्धिः। पूर्वमेव प्रतिपादितो वैखानसशाखामूलत्वेन प्रणीत सूत्र अनुष्ठातृणां श्रेष्ठतमत्वमछिद्रपेत्यज्यकालपरायणत्वादिकञ्च प्रतिपाद्यते।

यथा सामशाम्बे-

"वैखानसा वा ऋषय इन्द्रस्य प्रिय आसन्" इति।

वराहे-

अश्वतः कपिलागावस्तुलसी विखनोमुनिः।

चत्वारो मत्प्रिया राजन्! तेषां वैखानसो वरः।।
वृद्धयाज्ञवल्क्ये-
वैखानसो वैदिकेषु ब्रह्म मनिर्दिष्टमाचरेत्।
तं ब्राह्मणं तु दृष्ट्वैव सर्वपापं व्यपोहति।।
वैष्णवीं प्रतिमां लोके विप्रं वैखानसं तथा।
गङ्गा विष्णुपदं दृष्ट्वा सर्व पापैः प्रमुच्यते।। इति।
शान्तिपर्वणि-
मन्त्राणां सहस्रेभ्यो ब्रह्मचारी विशिष्यते।
ब्रह्मचारी सहस्रेभ्यो नित्ययाजी विशिष्यते।।
नित्ययाजी सहस्रेभ्यो सोमयाजी विशिष्यते।
सोमयाजी सहस्रेभ्यो सर्वा वेदान्त पारगः।
वेदान्तगस्सहस्रेभ्यो विष्णु भक्तो विशिष्यते।
विष्णुभक्त सहस्रेभ्यो विप्रो वैखानसो वरः।।
ब्रह्मवैवर्तने-
निम्नगानां यथा गङ्गा देवानां भगवान्हरिः।
वर्णानां ब्राह्मणः श्रेष्ठो आश्रमाणां तथैव च।
श्रुतीनामादि भूता तु श्रुतिरेकायनं मता।
तस्यां निषद्यथा यस्यां निषण्णो भगवान्हरिः।
व्यूहानामादि भूतास्तु वासुदेवो यथा परः।
त्रिमूर्ति .....मता।।
कौर्मे-
मच्चित्ता मद्गतप्राणाः मयिसङ्गत मानसाः।
अनन्य शरणा राजन्! तस्माद्वैखानसो वरः।।
पुराणान्तरे-
यत्र वैखानसा विप्राः यत्र सन्ति गवाङ्गणाः।
यत्र बित्वाः पलाशाश्च तत्र सन्निहितो हरिः।।
बृहन्नारदीये-
जगत्पवित्रास्ते नित्यं विष्णुमभ्यर्च्चयन्ति ये।
दुर्वृत्तो वा सुवृत्तो वा पूजनीयो विशेषतः।
हारीतः-
तस्मात्तेशुद्धसत्वस्था शुद्धा वैखानसास्मृताः।
यान् लोकान् प्रापयन्त्येते तान् शृणुष्व महीपते।
पञ्चरात्रे पौष्करे-
विप्रा वैखानसाख्या ये ते भक्तास्तत्वमुच्यते।

एकान्तिनस्तुरीयस्थाः देहान्तं नान्यथाजिनः।
कर्तव्यमिति देवेशं स यजन्ते फलं विना।
प्राप्नुवन्ति च देहान्ते वसुदेवत्वमेव च ।। इति।
गौतमीये-
वैखानसस्तु विद्वान्नज्ञः तत्त्वात्मार्थव्यवस्थितिः।
सूक्ष्मात्सूक्ष्मतरं प्राप्नोति परं ब्रह्माणमव्ययम्।।
अरण्य विधि। रोमशः-
ख्यातं च सैन्यवारण्यं पुण्यं मुनि निषेवितम्।
पितामहस्य पुण्यं पुष्करं नाम भारते।
वैखानसानां शीलानां ऋषीणामाश्रमं प्रियम्।। इति।
अन्यत्र-
सैन्यवारण्यमासाद्य कुरुक्षेत्रं कुरु दर्शनम्।*
पौष्करेषु महाराज सर्वेषु च जलं स्पृश।।
आर्षीक पर्वतश्चैव निवासो वै मनीषिणाम्।
सदापलाः सदास्नोतो मरुतां स्थानमुत्तमम्।
चैत्याश्चैव बहुशतास्त्रिदशानां युधिष्ठिर।
एतच्चन्द्रवतीतीर्थमृषयः पर्युपासते।
वैखानसाश्च ऋषयो वालखिल्यास्तथैव च।।
अन्यत्र -
सर्वाँल्लोकान्व्याप्यशब्दान् प्रसादात्तस्य धीमतः।
वैखानसानां शरणतामेवशब्दो महात्मनाम्।**
गारुडे-
कौषीतकानां गोत्राणां ग्रामत्रयमकल्पयत्।
अकल्पयच्च तान्ग्रामान्वैखानसमहात्मनाम्।
पारमेश्वरे अष्टोत्तरशताध्याये पवित्रविनियोगावसरे-
पूजयेदाप्लुतश्चैव याति पूर्वांस्तपस्विनः।
पञ्चवैखानसांश्चैव विप्रादींश्चतुरस्तथा।।
पञ्चयोगस्तदाहारस्तु तथान्यान्वैष्णवान्द्विजान्।
एकायनीद्वारशोकः श्रोत्रियाणां प्रथमं ततः। इति।
नारदीये-
सात्विके तु सदाशित्वं पूजनं मम नारद।

* Mahabharata -Aranyaparva - Ed.by V.S. Sukthankar, Pub. at BORI Vol.III, Page No.418 (TMSSM Library, Call No.S3936)
** Mahabharata -Aranyaparva - Ed.by V.S. Sukthankar, Pub. at BORI Vol.III, Page No.382 (TMSSM Library, Call No.S3936)

विद्धि वैखानसो दत्तं दानं ब्रह्मविदो यथा। इति।
वाल्मिकीरामायणे-
कृताभिषेकस्सन्तुष्टस्तामात्यस्सपुरोहितः।
पूजयामास धर्मात्मा रामो वैखानसान्मुनीन्।।
शाण्डिल्य स्मृतौ-
ये पावयन्ति धरणिं धरणैः पञ्चकालिकाः।
दर्शनात्स्पर्शनात्तेषां कृतार्थास्तर्वजन्तवः।।
इज्यायज्ञे तथा होमे यागे च जपकर्मणि।
आगतं पञ्चकालज्ञं संपूजयेदाचरेत्परम्।।
ये तोषयन्त्येऽविरतः पञ्चकालपरायणान्।
सर्वानस्तत्फलं यान्ति निष्कामाः परमं पदम्।।
बालाहितान्नयो ये च शान्ताश्शूद्राश्च वर्जिताः।
नार्चयन्ति भक्तास्ते तेभ्यो दत्तमिहाक्षयम्।। इति।
द्वादशाक्षर तत्वाज्ञश्चतुर्व्यूह विभागवित्।
अच्छिद्र पञ्चकालज्ञः संविप्रस्तारयिष्यत।। इति।
अथ पञ्चकालपरायणत्वं निरूप्यते-
द्वादशाक्षरतत्वज्ञः - द्वादशाक्षरतत्वानि-
यिज्जीवः प्रकृतिर्बुद्धिः मनस्तत्वादयो गुणाः।
व्योमाग्नि मरुतश्चाप्यो पञ्चानां तत्त्वनीरितम्।।
द्वादशाक्षर तत्वाज्ञश्चतुर्व्यूह विभागवित्।।
व्यूहस्तु त्रिविधः - वैविको मानुषश्चेति -
पुरुषं च ततस्तत्वं-वैखानस विदो जनाः।
अन्येत्वेवं विजानन्ति मां राजन्! पञ्चरात्रकाः।
वासुदेवं च राजेन्द्र! सङ्कर्षणमतः परम्।
प्रद्युम्नञ्चानिरुद्धञ्च चतुर्मूर्तिः प्रचक्षते।
एताश्चान्याश्च राजेन्द्र! संज्ञाभेदेन मूर्तयः।
विद्यन्तर्यान्तराण्येवं मामेवं चार्चयेद्बुधः। इति।
वैविक - मानुष भेदेन वासुदेवश्च त्रिविधः -
यथा खिले -
अथोर्ध्वं वासुदेवस्य मानुषस्य विधिं परः।
मनुष्य वपुषं देवं द्विभुजं शङ्खचक्रिणम्।।
इत्यादिना रुक्मिणी वासुदेव सङ्कर्षण प्रद्युम्नानिरुद्ध साम्ब सहित
गरुडादियुतं-'एवं वै मानुषं रूपं गोपुरे दीर्घ शालिके'।। इति।।

मानुषलक्षणम् -

तिकं वासुदेवं तु प्रवक्ष्याम्यनुपूर्वशः।
ोभयच्छन्दविमानं वा ब्रह्मवृत्तमथापि वा।।
तुर्भुजधरं देवं शङ्खचक्रधरं परम्।
भयं दक्षिणं हस्तं वामं कट्यवलम्बितम्।।
करीटादि समस्तैश्च भूषणैरपि भूषितम्।
ताम्बरधरं देवं दशतालेन मानतः।
ो देव्या उभे पार्श्वे पूर्ववत्कारयेद्बुधः।
लक्ष्म्यादि पूर्वोक्तं सायुधं वा निरायुधम्।।
दुक्त देवी समायुक्तं विना वा संप्रकारयेत्।
वती रोहिणी चैव रमा इन्दुकरीति च।।
कं नीलं तथाश्यामं पीतं वर्णं क्रमाचरेत्।
करीटनकुटैर्युक्ता सर्वाभरणभूषिता।।
कं पुष्पधरं कुर्यादिकं चैव प्रसारितम्।
ज्ञा युक्तं विना वापि द्विमार्गं संप्रकारयेत्।।
ं वैष्णिक मार्गं तु स्थापनारम्भमाचरेत्।। इति।
यादिना वैष्णिक मानुष भेदं प्रदर्शितम्। वासुदेवादीनां व्यूहभूतानां
ष्णिक मानुष भेदेन व्यूह चतुर्मूर्ति विभाग प्रतिपादनाभावात् पुरुषं,
नपुरुषं, परमात्मानं, परब्रह्मणमित्यादीनां चतुर्णां पुरुषादिना
र्तिविभागस्य, श्रीवैखानसशास्त्रे प्रतिपादितत्वात्।
ः कालेऽभिगमनमुपादानं ततः परम्।
ध्याह्नेज्यां प्रकुर्वीत स्वाध्यायऽपराह्णके।।
णं सायाह्नकाले तु पञ्चकाला उदाहृताः।।
ते वास्तुपिकारे प्रतिपादितत्वात्।

ये पावयन्ति धरणीं इज्यानध्ये ये तोषयन्त्यविरत
चकालपरायणान्, अतिसामान्येन पञ्चकालपरायणस्य दर्शन
र्शनादिभिः सर्वेषामपि पावनतां कृतार्थताञ्चोक्त्वा इज्यायोगादि
यषु च आगतं पञ्चकालं संपूज्यानन्तरं शेष कर्माचरणमुक्त्वा
दगुण वि शेष्टक इत्याकाङ्क्षायां 'अविरति पञ्चकालपरायणा'
यनेन 'अविच्छिन्न पञ्चकाल परायणा एव' इत्युक्तम्।

अविच्छिन्न पञ्चकालपरायणा वैखानसा एव, स्वशास्त्रे एव
पादितत्वात्। स्व स्व सूत्रेष्वनुक्तत्वापस्तम्बादीनां 'बाह्मे मुहूर्ते
येत धर्मार्थावनुचिन्तयन्' इत्यारभ्य
ोये च तथा भा[illegible] विधीयते।

तत्कार्यं साधयस्वेति त्वं वै कर्तुमिहार्हसि।।
हृषीकेशस्य तद्वाक्यमध्यायाथ कृताञ्जलिः।
चतुर्मुखश्चापि तथा सनकादि मुनीश्वरान्।।
ध्यात्वा चतुर्भिर्वेदैर्धर्म कर्मादिसृजदव्यभूः।
सनत्कुमारश्च तथा सनकश्च सनातनः।।
सनन्दन इति ख्याता ब्रह्मविद्या विशारदाः।
ततस्तो च मुनश्रेष्ठा ज्ञानातिशयवैभवाः।।
विरक्तचित्तास्ते जग्मुः कैवल्यं परमुत्तमम्।
स्वकार्यं साधयान्ब्रह्मा सृष्टवान् पुनरेवहि।।
प्राणाच्च चक्षुषस्तद्वद्वदनाच्च कर्णयोः।
हृदयाच्छिरसश्चात्रादुदानाद्व्यानतस्ततः।।
समानाच्च तथापान्ना दृष्टिश्रेष्ठानि मां दश।
दक्षं मरीचिं नील लोहितं भृगुमेव च।।
तथाङ्गिरसमत्रिञ्च पुलस्त्यं पुलहं तथा।
वसिष्ठं च क्रतुं चैव ब्रह्मणसृजदव्यभूः।।
मत ब्रह्मण एतेते विनाव्यनीललोहितम्।
धर्मसङ्कल्प सहितान् सनकादि मुनीश्वरान्।।
तान्हरेः पुरतः कृत्वा प्रोक्तवान् कमलासनः।
ब्रह्मोवाच-
देव देव जगन्नाथ सृष्टिस्थित्यन्तकारण।
भगवन् त्वत्प्रसादेन एतत्सृष्टामुनीश्वराः।
जातश्चिन्तयतो मत्तो त्वत्सृष्टिविषया अमि।।
एतैरपि व्रतं सर्वं जगदेतच्चराचरम्।
भृग्वादि मुनयश्चैव श्रुतिस्मृति निवेदनम्।।
शिष्या विखनसाः प्रोक्तास्सर्वशास्त्रार्थपारगाः।
वैखानसानां भृग्वाद्या वंशकर्तार शाङ्खिताः।।
मत्पुत्राणाञ्च सर्वेषामग्रतः पुरुषोत्तम।
भृग्वादीनुपनीयाथ सावित्रीमुपदिष्टवान्।।
परब्रह्मोपदेष्टा च स्वयमेव गुरुस्मृतः।
एतदुक्त प्रकारेण सर्वे वै मम सूनवः।।
आचरन्ति यथा न्यायं लौकीकाध्यात्म वैदिकान्।
एभिः प्रवृत्तिका सृष्टीरविच्छिन्ना मया हरे।
एते विखनसश्शिष्यास्सर्वलोक हितेरताः।
भवदाज्ञां प्रतीक्षन्ते नित्ये नैमित्तिकेऽपि वा।।

इत्युक्तो भगवान् प्राह मुनिश्रेष्ठं ततो हरिः।

श्रीभगवानुवाच-

वेद प्रभुर्विमाणाश्च मदिज्याराधनं मते।
मया संप्रार्थितास्त्वत्तस्तात् त्वमेव मुनिसत्तम।।
तपोधनेन तेनैव धन्योसि भुवनत्रये।
आत्मार्थं वा परार्थं वा नित्यनैमित्तिकादिकम्।।
तत्सर्वं त्वं प्रयत्नेन मदिज्याराधनं कुरु।
न दीक्षो न तथा कर्म मत्तुर्मकृतकर्मणाम्।।
अथाह ऋषिभिस्तस्मै प्रजभ्य जगदात्मने।

विखनोवाच-

भवतानुगृहीतोऽहं धन्योस्मि पुरुषोत्तम।
नातः परतरं कार्यं किमन्यापि दिवौकसाम्।।
अथातां वेद देवेश स्वकर्मनुमिमिस्सह।
उदयास्तमपर्यन्तं क्रियते नियतात्मभिः।।
सर्वेषाञ्च द्विजातीनां श्रुतिस्मृतिसमीरितम्।
कर्तव्यं सततं चैव स्वस्वकर्म प्रयत्नतः।।
भवदाराधनं विष्णोः कथं कालः क्षयोऽहनम्।
त्वत्कर्म क्रियते यत्ना कर्मलोपो भवेन्मम।।
इत्युक्तो भगवानाह मुनिना तत्ववेदिना।

श्रीभगवानुवाच-

विखनस्तं मुनिश्रेष्ठ। मदाराधन कर्मभिः।
स्वकर्मण्युपसन्त्रास व्याकुलीकृत चेतनः।।
त्वत्कर्मनिष्ठनूनानि सन्तुनित्यं मदाज्ञया।
त्वद्वंशजानां सर्वेषां कालो वै जातकर्मणाम्।।
कृतनत्ताश्चनानां च गर्भवैष्णव जन्मनाम्।
मत्कर्मकरणं तेषां कर्मलोपो कुलान्तिका।।
तिलः कोटिंचा मुनिश्रेष्ठाः कर्म कुर्वन्तु तत्सदा।
ज्ञात्वा यज्ञैषि स्नानानि मन्मतं सर्वमेव च।।
मन्मन्त्रकल्पजातानि मत्पुराणान्यनुक्रमात्।
आधित्य सर्वकर्माणि कलिहस्ति मदाज्ञया।
कृताधिकारिणास्त्वत्तः कृतसम्बन्धिनो मयि।
मत्प्रसाद भुजस्तौम्यत्राश्च प्रियतना मम।।
षट्कर्म निरतास्ते वै सात्विकाहार भोजिनः।

भवन्तु भावितात्मानो नत्कर्म करण क्षमाः।।
तस्माद्भागवतश्रेष्ठाः मम पुत्रा कृताभुवि।
तत प्राह मुनि श्रेष्ठः तमेवं वादिनं हरिम्।।
श्रीदिवाकरस उवाच -
भगवान् त्वत्प्रसादेन कर्मसाङ्गं यथोचितम्।
सर्वेषां मत्कुलीनानां भवत्वेव न संशयः।।

अतोत्र श्रुत्युक्तमार्गेण वैखानसानां सृष्ट्यादिकं अद्यारक भगवाद्यजनादेव, एतेषां नित्यकर्मानुष्ठान परिपूर्णता प्रतिपादिता।

अथ पञ्चन वेदत्वेन प्रसिद्धे भारते चानुशासनिके पञ्चशततमेऽध्याये भृग्वादि महर्षीणां वैखानसादीनां उत्पत्तिश्च निरूपिता। अतो देवलक लक्षणविलप्यते-

यथाह श्रीवैखानसे-
अर्चेरग्नानस विप्रो वा पूजयेद्यातये हरिम्।
स वै देवलको नाम हव्यकव्य बहिष्कृतः।।
वैखानस कुलेजातः पञ्चरात्रेण दीक्षितः।
निर्दीक्षितो न सज्ञातो लोभात्मोहान्मदेर्षनम्।।
कुर्यात्यक्तु विशेषेण भवेद्देवलकश्च सः।। इति।
पञ्चरात्रे सदाशिवेन संहितायाम्-
कर्म देवलकाः केचित् कल्पदेवलकाऽपरे।
शुद्धदेवलकाश्चान्ये त्रिधा देवलकास्मृताः।।
अर्थार्थी कालनिर्देशि यो देवं पूजयेत्सदा।
कर्म देवलको नाम सर्वकर्म बहिष्कृतः।।
पञ्चरात्र विधानज्ञो दीक्षाविरहितोऽर्चकः।
चतुर्विधार्चनारतोऽपि कल्पदेवलकस्मृतः।।
आगमोक्त विधानज्ञो ह्यद्यकालोपजीविकः।
शुद्धदेवलको नाम सर्वकर्म बहिष्कृतः।।
आर्षभोक्त विधानं तु देवलकत्रयविदुः।
तस्मात्सर्वं प्रयत्नेन वैदिकेनैव पूजयेत्।। इति।
शिवशेखरतन्त्रे रुद्रः -
अथ देवलका वक्ष्ये शृणुष्वेति समाहितः।
कर्मदेवलकाः केचित् कल्पदेवलकापि च।।
शुद्धदेवलकास्त्वन्ये त्रिधा देवलकाः स्मृताः।
अन्य सूत्रोक्त मार्गेण यः संवत्सरपूजकः।।
अतीक्षितस्वयं तत्र कर्मदेवलकस्तु सः।

अनेन प्रकारेण वल्लरश्चपूजकाः।।
कामोदवलकाः प्रोक्ताः तत्रैव गौतमीये मुखम्।
अनुज्ञातमोघार्याद्यागं शृण्वते च वाः।।
गौतमस्तस्य शिष्यस्य गुरुदेवलका उभौ।
अथो देवलकत्वं तु = विष्णु विषये ततोचित्।
स्नानाद्यादि विषयनेदागमसम्मतम्। इति।।
अविरुद्धमन्विष्टं विष्णुं गणनाथं महेश्वरम्।
गुरुजं च इत्येते हुडन् देवलकाः स्मृताः।।
विष्णु स्मृत्यन्तरे -
शक्तं सूर्यन्तथा चन्द्रं दुर्गादि रुद्रदेवताम्।
योऽर्चयेत्तत्पूर्वं स्नः स्नः यतति मानवः।
पुरं च भद्रकाली च गुरुश्च ओत्रवलकाः।
पञ्चमूर्ता च इत्येते पञ्चदेवलका स्मृता। इति।
विष्णु हारीतः -
देवालयकास्तु ये विप्रा हरिपूजन तत्पराः।
न हि देवलकाज्ञेयाः विष्णुपादाब्जसम्श्रयाः।।
स्मृतिरत्नाकरे अत्रि-
वैदिकेनैव विधिना उक्तोभवर्जितः।
पूजयेद् भक्तितो विष्णुं स हि देवलको न वै।।
विष्णुधर्मोत्तरे-
पार्श्विकायाश्च दुर्गाया ज्येष्ठाया भैरवस्य च।
रुद्रस्य पूजका ये तु तेवै देवलकास्मृताः।
चतुर्वेदधरो विप्रः स ब्रह्मात् सनो भवेत्।
विष्णु-
देवशब्दस्य प्रातत्यर्थं विचार्यमाणो -'दिव्-क्रीडा विजिगीषा व्यवहारद्युतिस्तुतिमोदनदस्वप्नकान्तिगतिषु' इति देवं शास्त्रोक्त मार्ग लभत इति देवलकः। 'स्वार्थे कप्'-
वृषो धर्मस्समाख्यातास्तस्य यः कुरुते लयम्।
वृषलं तं विदुर्देवाः निकृष्टं श्वपचादपि।। इति।
वृषल शब्दवत्, अन्यथाश्रुतिस्मृतिपुराणपञ्चरात्रादिषु प्रतिपादित वाक्यानां व्यर्थता स्यात्। शर्वार्चनाविधिप्रतिपादकस्य बोधायनस्यापि पतितत्वं सम्भवति। तन्त्रशास्त्रोपजीविषु तच्छिष्येष्वाप-स्तम्बादिवत्यन्तापतित्वं कैमुतिकन्यायसिद्धम्।।
अगर्हं वा सगर्हं वा नन दोषो न विद्यते।

अर्थसम्बन्धे सिलेक्शने पद्धत्यर्थं पुढचासाठी।।
पार्टसूत्रेनाचीकेन संपूर्ण लिखितञ्च यत्।।

।। शुभं भवतु ।।

।। कल्याणमस्तु भवन्तु ।।



ஸ்ரீ:

ஸ்ரீமத்விகனஸோத்பத்தி சரித்ரம்

மஹாமுனிகளே! கேட்போருக்கு ஸர்வ
பாபங்களையும் போக்கக் கூடியதாயும்,
மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடியதாயும்,
மங்களகரமானதாயும், கோரும் விருப்பங்களை
அடையச் செய்வதாயும், புண்யமானதுமான
விகனஸோத்பத்தி சரித்ரத்தைச் சொல்கிறேன்
கேளுங்கள்.

ப்ரளயத்தின் பின்பு ப்ரக்ருத்யாதி ஸகல சராசரங்களுக்கும் கர்த்தாவான புருஷச்ரேஷ்டரான. மஹாவிஷ்ணுவானவர் க்ஷீராப்தியிலே (பாற்கடலிலே) யோகநித்ரா பரவசராய் இரண்டு லக்ஷத்து ஐம்பதினாயிரம் யோஜனை நீளமுள்ள ரூபமடைந்தவராய் சயனம்கொண்டிருந்தார் அந்த யோகநித்திரையில் வெகுகாலம் சென்றன.

ஒரு காலத்தில் பக்தவத்ஸலரான ஹரியானவர் யோகநித்ரையினின்றும் விழித்து ப்ரக்ருதியை நோக்கி அதனிடம் லயித்துப்போயிருக்கும் ஜீவராசிகளின் கூட்டங்களை நினைத்து இதிலிருந்து இந்த பிரபஞ்சமானது ஆத்மாக்களால் பல பெயர் கொண்ட தோற்றங்களாகச் செய்விப்பதாக ஆலோசித்தார். இப்படி நினைத்த மாத்திரத்திலேயே பகவான் ஸ்ரீமந்நாராயணனின் நாபியிலிருந்து மிகப்பெரியதானதோர் தாமரை உற்பத்தியாயிற்று. அந்தத் தாமரைப்புஷ்பத்தினின்று அழகுவாய்ந்த ப்ரம்மா உற்பத்தியானார். பிறந்த அந்நிமிஷத்திலேயே அவர் விஷ்ணுபக்தராகி வைஷ்ணவபராயணரானார்.

கருணையின் கடலான ஹரியானவர் அந்த ப்ரம்மாவைப்பார்த்து சந்தோஷமுடன் சொல்கிறார் ஓ ப்ரம்மாவே! நமக்கு உலகத்தை ஸ்ருஷ்டித்து நடப்பிக்க ஆசையுண்டு. உன்னால் ஸகல சராசரங்களும் செய்யப்படவேண்டும். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகத்தின் வருத்தியைக் கோரியும் அதிலுள்ள ஸாது ஜனங்களை ரக்ஷிப்பதற்காகவும் வேத சாஸ்த்ரங்களை நிலைநாட்டவும் துஷ்கர்மா(கெட்டவர்களை) செய்பவர்களை ஸம்ஹரிக்கவும் (அழிக்கவும்) ஒவ்வொரு யுகத்திலும் நாம் அவதரிப்போம்.

மூன் கலியுகத்தில் கரைகடந்த மாயா சக்தியினாலே ஸம்ஸார ஸாகரத்தில் பிறந்த ஜீவன் ஞானமில்லாமலுமாய் இருக்கின்றன. அவர்கள் மனதை நிலைநிறுத்தி யோக சாதனத்தைக் கொண்டு பக்தி செலுத்த அறியாதவர்கள் ஆகையால் அவர்களுக்கு மோக்ஷத்தை கொடுக்க வேண்டியும் சர்வலோகத்திலும் பக்தியை பெருக்க வேண்டியும் பூலோகத்தில் ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேதராய் அர்ச்சாவதார (சிலையுருவடிவாய்) ரூபமாய் அவதரிக்கப் போகிறோம். அப்பொழுது பூஜை முதலான காரியங்களுக்காக ஒரு ஆதிஸ்ருஷ்டி என்னும் முனிவரை ஸ்ருஷ்டிக்கக் கடவாய் என்ற ஆக்ஞையை பிறப்பித்தார்.

இந்த ஆக்ஞையை ஏற்று அதன்படி ஒரு முனிவரை ஸ்ருஷ்டிக்க எண்ணி முடியாதபடியினாலே தனது ஸாத்யமில்லா சக்தியை அறிந்து பகவானை நமஸ்கரித்து சொல்லிக் கொள்கிறார்.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய காரணகர்த்தாவான ஓ தேவ! முனிவரை ஸ்ருஷ்டிக்க சக்தியைக் காணோம் என்று சொன்னதைக் கேட்ட ஹரியானவர் தாமே ஸ்வயமாக வேதாந்த மீமாம்ஸா சாஸ்த்ரங்களை உச்சரித்தார். அச்சமயம் நமது அம்சத்தினின்றும் பகவானை அர்ச்சன - ஆராதனை செய்யக்கூடிய சக்தி வாய்ந்தவராயும் ரூபலக்ஷணங்களுடன் தேஜோமயமான தேவருக்குச் சமமானவராயும், சுத்தஸாத்வீககுணம் பொருந்தியவராயும், முனிவேஷத்துடன் நான்கு கைகளும் சங்கு சக்கரமும் வரதாபயஹஸ்தங்களும் பத்மமும் தர்பாஸனமும், ஊர்த்வபுண்ட்ரம் தரித்வராயும், கிரீடம், ஹாரம், ஆபரணம், குண்டலம், புஜகீர்டம், என்னும் பாஜிபந்தம் ஆகிய அனைத்து அணிகலன்களாலும் அலங்கரிக்கப்பெற்றவராகவும், சிகை (குடுமி), யக்ஞோபவீதம், த்ரிதண்டம் ஆகியவைகளோடும் ஒரு முனி (ஜனித்தார்) தோன்றினார்.

ஆத்மாவை புத்ரநாமாஸி விஷ்ணோர்விச்வகுடும்பினே:

பொருள்:- இந்த உலகமே குடும்பமாய் வாய்க்கும் விஷ்ணுவுக்கு ஆத்மாவே புத்ரனாகப் பிறந்தது.

அந்த முனியைப் பார்த்து எனது ஔரஸ புத்ரா! என்று கூப்பிட்டு; தீர்க்காலோசனையின்பேரில் பிறந்தவரானபடியால் 'விகனஸர்' என்று பெயரிட்டார். மேலும் ஹரியானவர் தாமாகவே விகனஸரை ப்ரம்மாவுடன் சேர்த்து விகனஸருக்கு முதலில் மோக்ஷமார்க்கமான இரண்டு மந்த்ரங்களையும், மூலமந்த்ரத்தையும், அனைத்து சாஸ்த்ரங்களையும், விதிகளையும் உபதேசித்து பிறகு வேதமானது வ்யாஸ மஹரிஷியால் பகுக்கப்படுவதற்கு முன்பே உள்ள வேதரூபமான வைகானஸ சாகையை அத்யயனம் செய்வித்தார். பிறகு பத்மநாபரானவர் ப்ரம்மாவைப் பார்த்து இந்த விகனஸரானவர் உனக்கும் மூத்தவரென்றும், ப்ரக்ருதியில் சம்பந்தமில்லாத சரீரி என்றும், எமது ஆக்ஞையை நிறைவேற்றுபவனென்றும் எனது ஔரஸ புத்திரனென்றும், எப்பொழுதும் எம்விஷயமாய் ஸகல கார்யங்களையும் செய்பவனென்றும், எமது அம்சத்தினின்றும் பிறந்தவனென்றும் சொல்லி ; மேற்கூறிய விசேஷாம்சங்களுடைய இவர் உன்னால் பூஜிக்கத்தகுந்தவரென்றும் கூறி; உலக ஸ்ருஷ்டிக்கென்றே ஸ்ருஷ்டித்து நமஸ்கரித்துக் கொண்டிருக்கும் அந்த ப்ரம்ம தேவரைப் பார்த்து, எமது கைங்கர்யத்தைச் செய்ய

வல்லமையுள்ள முனியை உலக ஸ்ருஷ்டிக்கு முதலே நாம் உற்பத்தி செய்தோம். நீயும் சுத்த ஸாத்வீகமான ஸனகாதிகளையும் உலக ரக்ஷணையின் பொருட்டு ஸ்ருஷ்டித்து பிறகு எல்லாவற்றையும் (அனைத்து சராசரங்களையும்) ஸ்ருஷ்டிக்கலாம் என மொழிந்தார்.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஆக்ஞைப்படியே ப்ரம்மாவானவர் ஸனக, ஸநந்தன, ஸனத்குமாரர் ஆகிய ஸனகாதிகளை ஸ்ருஷ்டித்து மஹாபாக வதோதாதமர்களான அவர்களை நோக்கி நீங்கள் மஹாவிஷ்ணுவின் ஔரஸபுத்ரரான ஸ்ரீ விகனஸரின் சிஷ்யர்களாவீர்கள் என்று சொன்னார். பிறகு க்ரமமாய் தனது (தொழிலான) கர்மாவான ஜீவ ஜந்துக்களையும் இந்தப்பதினான்கு உலகங்களிலும் ஸ்தாவர ஜங்கம, தேவ, திர்யக், மனுஷ்யாதிகளையும் நாரதாதி முனிகளையும் ஸ்வாயம்பு முதலான மனுக்களையும் ஸர்வ உலகங்களையும் ஸ்ருஷ்டித்து விஷ்ணுவுக்குக் காண்பித்துச் சொன்னார். தேவா! உமது ஆசீர்வாதத்தினால் இந்த விச்வங்களையெல்லாம் ஸ்ருஷ்டித்தேன் என்றதும், பகவான் எல்லாவற்றையும் பார்த்து தம்தம் கார்யங்களினால் ஸம்ஸாரக் கடலுள் மூழ்கி முடிவில்லாத மாயா மோஹித சித்தமுள்ளவர்களாய் இவர்களை மதித்து விகனஸரைப் பார்த்து விச்வமெல்லாம் ப்ரம்மாவினாலே ஸ்ருஷ்டிக்கப்பட்டபடியினாலே எனது கைங்கர்ய நிமித்தத்திற்காக ஸாத்வீக குணம் நிறைந்த முனிகளை எமது ஆக்ஞைப்படி நீயே ஸ்ருஷ்டிக்கக்கடவாய் எனவும், ப்ருகு அத்ரி, வஸிஷ்டர், (என்னையும்) மரீசி, காச்யபர், ஜமதக்னி, பரத்வாஜர், விச்வாமித்ரர், கௌதமர் முதலான மஹாமுனிகளை விஷ்ணுவைப் பூஜிக்க அர்ஹர்களாக விஷ்ணுவின் கடாக்ஷ மஹிமையால் கர்பசக்ராங்கிதமுடன் ஸ்ருஷ்டித்து பகவானுக்கு எதிரே நிறுத்தி; தமது ஆக்ஞைப்படியே ஸ்ருஷ்டித்த ப்ருகு முதலானவர்களுக்கு தந்தையும், தாயும், குருவும், தெய்வமும், போஷகரும் தாமாகவே இருந்து இவர்களுக்கு ஸாவித்ரியை உபதேசிக்க வேணுமென்று விண்ணப்பிக்க, அதனை ஏற்று ஹரியானவர் புன்னகையுடன் விகனஸரை நோக்கி ஸ்ருஷ்டித்த இவர்களுக்கு ஸகல கர்த்தாவும நீயாகவே இருப்பாய். ஸனகாதிகளுக்கும் கூட நீயே குருவாயிருந்து நீயும் ஸாவித்ரீ மந்த்ரத்தை உபதேசிக்க அர்ஹணாகுவாய்; எம்மைப் போற்றும்படி த்வயமந்த்ர, மூலமந்த்ரங்களையும் உபதேசம் செய்யுங்கள் என்று விகனஸரைப் பார்த்துக் கூறி; ப்ருகு முதலான முனிபுத்ரர்களையும் ஸனகாதிகளையும் நோக்கி; ஓ புத்ரர்களே! ஸர்வ சாஸ்த்ர பராயணரான விகனஸரை ஆசார்யனாக அமர்த்திக்கொண்டு அத்யயனம் செய்துகொண்டு அவரை ஆச்ரயுங்கள் என்று சொல்லி ப்ரம்மாவுடன் கூட விகனஸருக்கு ப்ருகு முதலானவர்கள்

வம்சத்தாரும் எமது புத்ரர்களும் சிஷ்யர்களாவார்கள் என்று சொன்னார். மேலும் உன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கும் முனிகளுக்கும் ஆசார்யன் விகனஸரே. அவர் போற்றுப்படியே உனது புத்ரர்களும் நடக்கட்டும் என்ற சொல்லி நீ இப்பொழுது ஸ்ருஷ்டியின் நிமித்தம் ஸ்வாயம்பு முதலானவர்களுடன் உனது உலகத்தை அடைந்து ஸ்ருஷ்டியைச் செய் என்று சொல்ல, பிதாமஹரான ப்ரம்மா அப்படியே சென்றார்.

ஸ்ரீ விகனஸ மஹரிஷி பூலோகத்ததில் ப்ரவேசமான விஷயம்.

ஸ்வாயம்புவ மனுவின் காலத்திலுள்ள உலக வ்ருத்தியைப் பார்க்க வேண்டி ப்ரம்மதேவர் புறப்பட்டு ஸர்வலோகங்களையும் பார்த்து: ஸூர்யனில்லாமல் இருள் சூழ்ந்திருப்பதுபோல எத்திசையிலும் ஹரிநாம கீர்த்தனமில்லாததால் வ்யாதியால் பிடிக்கப்பட்டவர்களாகவும், பாபாத்மாக்களாகவும், க்ரூரர்களாகவும் இருக்கும் ஜனங்களைப் பார்த்து தம்புத்ரர்களுடன் விஷ்ணு லோகத்தையடைந்து அங்கு ஸ்ரீ தேவி, பூதேவிகளாலும் ஸேவிக்கப்பட்டவராயும், ஸர்வ லோகங்களுக்கும் ஹிதத்தைக் கொடுப்பவராயும் பத்மநேத்ரங்களையுடையவராயும் விகனஸ, அத்ரி, ப்ருகு, வ்யாஸ, போதாயனாதி மஹரிஷிகளால் ஸேவிக்கப்பட்ட ராயுமுள்ள பகவானைப் பார்த்து ஓ தேவா! இந்த சராசர ரூபமான உலகத்தில் உமது அர்ச்சனையோ திருநாமஸ்மரனையோ இல்லாதிருக்கிறபடியால் மாயா பீடிதத்தால் அக்ஞானம் வளர்ந்து உலகங்கள் கெட்டுக்கிடக்கின்றன. உமது ஆக்ஞைப்படியே இந்த விச்வங்களை ஸ்ருஷ்டித்தேன். இவை எல்லாவற்றிற்கும் தாமே கதியாகிறீர். பூர்வகாலத்தில் அரச்சாவதார விஷயமாய் தங்களால் அருளப்பட்ட ப்ரகாரமாய் அவதரித்து உலகத்தை ரக்ஷிக்க வேணுமென்றுக் கோரிய ப்ரம்மாவைப் பார்த்து ஹரியானவர் இவ்வாறு கூறினார். ஓ பத்மஸம்பவா! உன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட உலகத்தில் ஸாது ஜனங்களை ரக்ஷிப்பதற்காகவும், துஷ்டர்களை சிக்ஷிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவும் ஒவ்வொரு யுகத்திலும் நாம் அவதாரம் செய்கிறோம். பூலோகத்தில் அர்ச்சாவதார ரூபமாய் ஸ்ரீபூமி தேவியர்களுடன் அர்ச்சாவதாரம் செய்யப்போகிறோம். தேவர்களுடனும் நீ உனது உலகத்திற்குப் போகலாமென்றுக் கூற ப்ரம்மா அவ்விதமே செய்தார். பிறகு பகவான் முனியான விகனஸரை அழைத்து உலக ரக்ஷணைக்காக ஸ்ரீதேவி, பூமிதேவி ஆகியோருடன் நாம் அர்ச்சாவதார ரூபமாய் பூமியில் அவதரிக்கப் போகிறோம். நீ ஆத்மார்த்தமாயும், பிறருக்காகவாயினும்,

வீட்டிலாயினும், தேவாலாயங்களிலாயினும், நித்ய நைமித்யங்களிலும் எம்மை ஆராதித்துக் கொண்டிருக்கடவாய், எம்மமைக் கோரிச் செய்யும் கார்யங்களுக்கு தீக்ஷை தேவையில்லை. மேலும் ஸர்வ லோகங்களுக்கும் நன்மையைக் கோரியும் எம்மை ஆராதிக்கவேணும் என்று சொல்லவே பயத்தினால் விகனஸமுனி பகவானை நோக்கிச் சொல்லிக்கொள்கிறார்.

ஓஸ்வாமி! தமது ஆசீர்வாத அர்ஹனான நான் தன்யனானேன், அன்றி தேவாதிகளுக்கும் எங்களுக்கும் தாம் அருளிய உத்தமமான கார்யத்தைச் செய்ய சஞ்சலாத்மாக்களான என் போன்ற ரிஷிகளுக்கு நித்யமும் நிறைவேற்றுவது துர்லபம். தேவாதிகளுக்கும் கூட அசாத்யமான இந்த கைங்கர்யத்தைச் செய்யும் முறையில் கர்மலோபமுண்டாகலாம். அற்பபுத்தியினாலே அந்த தேவ ஆக்ஞைக்குத்தப்பிப் போகலாம். அல்லாமலும் எப்போதும் தமது ஸந்நிதானத்திலேயே இருக்க வேண்டியிருப்பதினாலும் அனேக அபசாரங்கள் உண்டாகலாம். எல்லா தெய்வாராதனைகளிலும் விஷ்ணு, ஆராதனமானது மேன்மையானதாகையால், அப்படிப்பட்ட தவறுதல்கள் ஏற்படக்கூடிய அக்கார்யத்தில் நியமிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளவே இவ்வார்த்தைகளைக் கேட்ட பகவான்—

ஓ விகனஸ முனியே! எம்மை ஆராதிக்கும்பொழுது சுயகர்மலோபமாகுமென்று பயப்படாதே! காலபேதங்களினால் எற்றத்தாழ்வுகள் எற்பட்டாலும் எம்மைக் கொண்ட கர்மங்கள் ஸம்பூர்ணத்தையே அடையும். உனது வம்சத்தாரான முனீந்திரர்களுக்கும் அப்படியே ஆகும். ஆகையால் எமது ஆக்ஞைப்படி நீ எமது ஆராதனத்தைச் செய்வாய் உனது சிஷ்யர்களும் அவர்களின் சிஷ்யர்களும் அவர்களின் சிஷ்யர்களும் கூடி எமது பூஜையைச் செய்யக்கடவர். உனது வம்சத்தார்களான கர்பவைஷ்ணவர்களுக்கெல்லாம் நாமே ஸ்வயமாய் கர்பத்திலிருக்கும் போதே எமது முத்ரையை தரிக்கச் செய்கிறோம். எம்மை ஆராதிக்கும்பொழுது இடையில ஏதாவது கார்யம் ஏற்பட்டாலும் அதைச் செய்துவிட்டு பிறகு எமது கைங்கர்யத்தை நிறைவேற்றக்கூடும். காலபேதங்களினாலே தோஷமில்லை. நான்கு வேதங்களுடன் கூடின மந்த்ரங்கள் உனக்கு சொல்லப்பட்டிக்கிறது. அத்துடன் யஜுர்வேதத்தை அனுசரித்து உனது மதத்தார்கள் எம்மை அர்ச்சனை செய்யும் எல்லோருக்கும் ஐஹிகாமுஷ்மிக பலன்கள் இரண்டும் கிடைக்கும். எனவே எமது ஆக்ஞைப்படி தினமும் எம்மை ஆராதிக்கக்கடவாய்.

உனது மதஸ்தர்கள் ஸாத்வீகர்களாயும் எப்பொழுதும் எம்மீது பக்தி செலுத்தும் சித்தமுள்ளவர்களாயும் இருப்பார்களான படியினாலே எமது புத்ரர்களென்று சொல்லப்படுகிறார்கள். எமக்கு ஸம்பந்தப்பட்டவர்களாயுள்ளவர்களில் ஸௌம்யமான எமது ஆசீர்வாதங்களைப் பெற்றவர் எம்மை ஆராதிக்கக்கூடவர் இக்காரணத்தினால் தினமும் எம்மை ஆராதிக்க நீ பயப்பட வேண்டியதில்லை. ப்ரம்மாதி தேவர்களும் கூட எம்மை ஆராதிக்க ஸமர்த்தர்களல்ல. ஆகையால் எம்மைப்பூஜித்து ஸர்வாபீஷ்டங்களையும் அடையக்கடவாய் என்று சொல்லும் ஹரியை நோக்கி நமஸ்கரித்து நமது ஆக்ஞைப்படியே செய்யும் எனது வம்சத்தார் எல்லோருக்கும் உம்மால் ஜீவனோபாயமாகிற படியினாலேயும் தோஷங்கள் எற்படலாமென்று சஞ்சலப் படுகிறேன் என்று விகனஸர் கூற; எமது கைங்கர்யத்தைச் செய்யும் வைகானஸர்களுக்கு அந்த தோஷம் இல்லை. எனது பொருள்கள் ஹவ்யகவ்யங்களிலும், தானங்களிலும், பூஜைகளிலும் எப்பொழுதும் எம்மைப்பூஜிக்கும் உங்களுக்கு முக்யமாகவே இருக்கும். எமது அம்சத்தினால் உங்களுக்கு முக்யமாகவே இருக்ககும். எமது ஆக்ஞைப்படி நடப்பவர்களான படியினாலும் எமது தனத்தை அனுபவிக்கும் தோஷம் உங்களுக்கு இல்லை. அதற்காக பயப்படவேண்டாம். எம்மை ஆராதனை செய்பவனாய் இரு என ஆக்ஞாபித்தார்.

விகனஸாசார்யனுக்கும் பகவான் ஸ்ரீமந்நாராயணனுக்கும் நடந்த ஸம்வாதம்

பகவானின் ஆக்ஞையை எற்றுக்கொண்டு திரும்பவும் சொல்லிக்கொள்கிறார்.

ஓ ஸ்வாமி! தமது பாதாரவிந்தங்களை அடைந்ததன் பயனாக தன்யனாகவும், க்ருதார்த்தனாகவும், உபயோகமான ஜீவனத்தொழிலை அடைந்தவனாகவும் ஆனேன். தெய்வீக விஷயமாயும், மானுஷிக விஷயமாயும் ஸூர்யோதயம் முதல் அஸ்தமனம வரையிலும் நித்யாத்மாவான முனீச்வரர்களால் எந்தவிதிப்படி உமது ஆராதன கைங்கர்யத்தைச் செய்ய வேண்டுமோ அதனைச் சொல்ல வேண்டுகிறேன் என்னும்; பகவான் அப்போதே தேவவாக்கையும் ஸமஸ்த வேத சாஸ்த்ரங்களையும், மந்த்ரங்களையும், ஆகமார்த்தங்களிலே

ஆசாரங்களையும், ஆகம ரஹஸ்யங்களையும், மந்த்ரங்களுக்கு மூலமந்த்ரங்களையும் தாமே சொல்லி; நீ செய்யும் ஸூத்ரம் வைகானஸம் என்று சொல்லப்படும் வீடுகளிலும், தேவாலயங்களிலும் அர்ச்சிக்கக்கூடும். நிஷேகம் முதலாக ச்மசானம் வரையிலும் மானுஷீகவிஷயத்தையும், கர்ஷணம் முதல் உத்ஸவம் வரை தெய்வீக விஷயத்தையும் மற்றும் வேண்டிய எல்லாவற்றையும் உனது ஸூத்ரத்தில் சொல்லி ; எம்மை ஆராதிப்பதும் எமது நாமஸ்மரணை செய்வது எம் த்வயமந்த்ரம், மூலமந்த்ரம் ஆகியவைகளையும் குரு சிஷ்ய பரம்பரையாக உபதேசித்து ஜபித்து வருவதால் மோக்ஷபலனானது தடைபடாது என்றும் பகவான் கூறினார்.

வைகானஸர்கள் என்றால் எமது புத்ரர்கள் என்றும், கர்பத்திலேயே சக்ராங்கிதம் செய்யப்பட்டவர்கள் என்றும் ஆவார்கள். வைகானஸ ஸ்த்ரீகள் கர்பம் தரித்த எட்டாவது மாதத்தில் கர்பத்திலுள்ள சிசுவுக்கு எமது முத்ரையாம் சக்ராதாரணத்தை தரிக்கச் செய்கிறோம். அந்த முத்ரையானது சிசுபிறந்தவுடன் காணப்படமாட்டாது. அந்தப்படி நாம் கர்பத்திலேயே ஸமாச்ரயணம் செய்தாலும் உனது மதத்தோர்களுக்கு நீயே குருவாக ஆவாய். உலகத்தில் வைஷ்ணவம் நான்கு விதமாக சொல்லப்படும். அவை அனாதிவைஷ்ணவம், ஆதிவைஷ்ணவம், பஞ்சஸம்ஸ்காரவைஷ்ணவம், அவாந்த்ரவைஷ்ணவம் என்பதாகும். இதில் அனாதி வைஷ்ணவம் என்பது பராத்பரமான எமக்கே கூறப்பட்டதாகும். ஆதி வைஷ்ணவர்களென்பது உனது ஸூத்ரர்களான ஸ்ரீவைகானஸர் களையும்; பஞ்சஸம்ஸ்கார வைஷ்ணவர்களென்பது ஆசார்யனிடத்து பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொள்ளும் ஸ்ரீபாஞ்சராத்ரர்களையும்; அவாந்தர வைஷ்ணவர்களென்பது முண்டமுத்ராதாரிகளாக பெருக்கு மட்டுமாக செயல்படுபவர் களையும் குறிக்கும். இவைகளில் ஸ்ரீவைகானஸர்கள் மட்டும் எனக்கு புத்ரர்கள். மற்றவர்கள் எமக்கு தாசர்கள். எமது புத்ரர்களுக்கு அடையாளங்கள் வேண்டியதில்லை. எமது தாஸர்களுக்கு அடையாளங்கள் உண்டு. பன்னிரு நாமங்களும் கழுத்தில் துளசிமணி மாலைகளும், எமது நாம ஸங்கீர்த்தனங்களும் முக்தியைக் கொடுக்கும். வித்வான்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஸ்ரீ வைகானஸர்கள் எமது பக்தர்களையும், மற்றவர்களையும், எமது உலகத்தையும் உத்தாரகம் செய்பவர்களாவார்கள்.

ஸ்ரீ வைகானஸ ஸூத்ரத்தைச் சேர்ந்தவன் அசுசியாயிருந்தாலும், அநாகரீகஸ்தானாய் இருந்தாலும் வித்வத் திறைமையிலும் தாழ்த்தவனாக இருந்தாலும் எமது பாததீர்த்தத்தை ஸ்வீகரித்துக் கொள்வதாலும், எமக்கு நைவேத்யம் செய்த அன்னத்தை உட்கொள்வதாலும் அவன் செய்த பாபங்கள் அனைத்தும் பரிஹரிக்கப்படும். இந்த காரணங்களால் எமது ஆராதனத்தில் தோஷங்கள் ஏற்படாது. ஸாதுக்களை ரக்ஷிக்கும் நிமித்தம் ஸ்ரீ தேவி, பூமிதேவி ஸஹிதமாய் பூலோகத்தில் அவதரிக்கிறோம். ஆகையால் நீ உனது புத்ரர்களான ப்ருகு முதலான முனிகளுடன் கூட உத்தமமாயும் ப்ரஸித்தமாயும், தபோபலமுள்ளதாயும் உள்ள நைமிசாரண்யத்தில் ப்ரவேசிக்கலாம். நாம் அங்கு நரநாராயண ரிஷியாக அவதரிக்கப் போகிறோம். அங்கே எம்மை ஆராதனம் செய்ய வேணும். எமக்குப்ரியமான நைமிசாரண்யத்தில எமது ஆக்ஞைப்படிக்கு எல்லோராலும் பூஜிக்கக்கூடியவராம் நாராயண பராயணர்களான சிஷ்யர்களுடன் கூட லோகத்திற்கு ஹிதம் செய்யக்கூடிய தைவிக-மாநுஷிகம் என்ற குறிப்புடன் வைகானஸ ஸூத்ரத்தை அபிவ்ருத்தி செய்யவேண்டும். அர்ச்சா விக்ரஹரூபமாய் நாம் எங்கெங்கு அவதரிக்கிறோமோ அங்கெல்லாம் உனது ஸூத்ரத்தைக் கொண்டவர்கள் எம்மை ஆராதித்து வரவேண்டும். எமது ஆக்ஞைப்படி உனது ஸூத்ரத்தை அவலம்பிக்கிறவர்களுக்கும், எம்மைக் கோரியே ஸகல கர்மாக்களையும் செய்பவர்களுக்கும், எமது ஆக்ஞைப்படி நடப்பவர்களுக்கும் மறுஜன்மம் கிடையாது. நீ பயப்படவேண்டாம். உனது சிஷ்யர்களான ப்ருகு முதலானவர்களுடன் எம்மை பூஜிப்பாய். அபசார தோஷங்கள் எதுவும் எற்படாது என்று மொழிந்தார்.1

அந்த பகவானின் ஸத்வாக்கியங்களைக் கேட்டு சந்தோஷப்பட்டு, பகவானின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படித்து நமஸ்கரித்து சிஷ்யர்களுடன் ஸ்வாயம்புவ மனுவின் ஆட்சிகாலம்; முதல் க்ருதயுக சுக்ல வருஷத்தில், ஆவணிமாத வளர்பிறை, பௌர்ணமி திதி, திங்கட்கிழமை, திருவோண நக்ஷத்திரமும், சிம்மலக்னமும் கூடிய காலை நேரத்தில் விகனஸர்

---

1 ஸ்வாயம்புவ மனோ:காலே யுகாதௌ சுக்லவத்ஸரே 11
ச்ரவணேச்ராவணே சுக்ல பூர்ணிமா ஸோமவாஸரே 1
ஸிம்ஹலக்னேன ஸம்யுக்தே விகனாத் ப்ராபநைமிசம் 11

நைமிசாரண்யத்தில் ப்ரவேசித்தார். அப்பொழுதே விகனஸர் சந்தோஷத்துடன் வைகானஸ ஸூத்ரத்தை எழுதத் தொடங்கினார். அந்த விகனஸ முனியினால் முப்பத்திரண்டு அத்யாயங்கள் கொண்ட மானுஷிக கர்மங்களான நிஷேகம் முதலாக சமசானம் வரையிலான ஒரு கோடியே ஐம்பது லக்ஷம் ப்ரமாணங்களும் தைவிக விஷயமாய் கர்ஷணம் முதல் உத்ஸவம் வரையிலும் சொல்லப்பட்டது. அந்த ஸூத்ரங்களின் க்ரந்த விஸ்தாரத்தின் விரிவை அஞ்சி குருவான வினஸாசார்யனின் அனுக்ரஹத்தோடு காச்யபர், அத்ரி, ப்ருகு. மற்றும் என்னாலும் (மரீசி) நான்கு லக்ஷம் க்ரந்தமாகச் சுருக்கிக்கூறப்பட்டது.

நான்கு லக்ஷம் க்ரந்த ப்ரமாணத்திற்கான விபரம்

ஜயமென்றும், ஆனந்தமென்றும், ஸம்ஞானமென்றும், வீரமென்றும், விஜயமென்றும், விஜிதமென்றும், விமலமென்றும், கல்பமென்றும் மொத்தம் ஒரு லக்ஷத்து என்பத்து நாலாயிரம் க்ரந்தங்கள் எட்டு ஸம்ஹிதைகளாக என்னால் (மரீசி மஹரிஷியால்) சொல்லப்பட்டது.

திலமென்றும், கிலாதிகாரமென்றும், புராதிகரணம், வாஸாதிகரணம், அர்ச்சாதி கரணம், மாஸாதிகரணம், க்ரியாதிகரணம், நிருக்தாதிகரணம், ப்ரகீர்ணாதிகரணம், யக்ஞாதிகரணம் என்பதாக அறுபத்து நாலாயிரம் க்ரந்தங்கள் ப்ருகு மஹரிஷியால் சொல்லப்பட்டது.

பூர்வதந்த்ரம், விஷ்ணுதந்த்ரம்,உத்தரதந்த்ரம், மஹாதந்த்ரம் என்பதான நான்கு தந்த்ரங்களும் என்பத்தெட்டாயிரம் க்ரந்த பரிமாணமுடையதாக அத்ரிமஹரிஷியால் சொல்லப்பட்டது.

ஸத்யகாண்டம், கர்மகாண்டம், ஞானகாண்டம் என்ற மூன்று காண்டங்கள் அறுபத்து நாலாயிரம் க்ரந்த ஸங்க்யை உடையதாக காச்யப மஹரிஷியால் சொல்லப்பட்டது.

மேலே சொல்லப்பெற்றுள்ள இந்த நான்கு விதங்களும் விகனஸ ஸூத்ரத்தையே ப்ரதானமாகக் கொண்டு அமைக்கப் பெற்றதாகும். இப்படியிருக்க கொஞ்ச காலத்தில் விஷ்ணுவானவர் நரநாராயண ரிஷியாக பத்ரிகாச்ரமத்தில் அவதாரம் செய்து உலகத்தை ரக்ஷித்துக் கொண்டிருந்தார். அந்த விஷ்ணுவின் அவதாரத்தை முனிச்ரேஷ்டரான விகனஸர் அறிந்து அங்கு வந்து நரநாராயண ரூபமாயுள்ள விஷ்ணுவை நமஸ்கரித்து விதிப்படி பூஜை செய்தார். அது முதல் உலக ரக்ஷணைக்காக ஸ்வாமியானவர் எங்கெங்கு அர்ச்சா ரூபமாய் அவதரிக்கிறாரோ அங்கெல்லாம் ஸ்வாமியை ஆராதிக்க வைகானஸ

ப்ராம்மணர்களான நாங்கள் எங்கள் புத்ரபௌத்ரர்களுடன் கூட மஹாப்ரபுக்களால் அழைக்கப்பட்டு பகவானை ஆராதிப்பதற்கு க்ரமமாய் ஆசார்யரின் அனுக்ரஹத்தினால் ஸ்ரீ புண்ட்ரம் என்னும் க்ராமத்தை அடைந்து அதன்பிறகு விஷ்ணு பூஜைக்காக எங்கும் நிலைத்து நின்றோம்.

ஸ்ரீமத்விகனஸோத்பத்தி சரித்ரம் முற்றும்.



ஸ்ரீ வைகானஸ சரித்ரம்

ஸ்ரீமதனந்த கல்யாணகுண விசிஷ்டராயும் சங்கசக்ர கதாதரராயும் ஸ்ரீ வைகானஸ பூஜிதராயும் உள்ள ஸ்ரீமந்நாராயணன் அகில ஜகத் ஸ்ருஷ்டியின் நிமித்தம் தமது நாபிக்கமலத்திலிருந்து நான்முகனையும், அந்த சதுர்முக ப்ரம்மாவினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அனைவரும் ஸம்ஸாரக்கடலில் அழுந்தி கிடப்பதால் பகவானின் மஹிமைகளை அறியமுடியாத மாயாமோஹிதமான மனதையுடைய ஜனங்களின் அக்ஞானங்களை நீக்கி பகவத் தத்வங்களை போதிக்க அர்ச்சனாதி முறைகளால் நிறைவேற்றும் பொருட்டு தமது ஹ்ருதயகமலத்தினின்றும் ஸ்ரீ விகனஸ மஹாமுனியை ஸ்ருஷ்டித்து உலக ஸ்ருஷ்டியை சதுர்முக ப்ரம்மாவிற்கும்; அர்ச்சனை ஆராதனை முறைகளை ஸ்ரீவிகனஸருக்கும் உபதேசித்து அனுக்ரஹித்தார். அப்பொழுது ப்ரம்மாவானவர் அகில உலகங்களையும், ஸ்வாயம்பு முதலான மனுக்களையும் ஸ்ருஷ்டித்து; அவர்களில் ஒருவரான ஸ்வாயம்புவ மனுவை நோக்கி நீபூலோகத்திற்குச் சென்று ஜனாபிவ்ருத்தி செய் என ஆக்ஞாபித்தார். அவர் ஜலமயமாயுள்ள கோளமத்தியில் பூமியைக் காணாததால் வசிக்க ஆதாரமான இடமில்லையே என்று ப்ரம்மாவிடம் சொல்ல; நான் முகன் ஹரியைப் ப்ரார்த்தித்தார். உடனே ஹரியானவர் யக்ஞவராஹம் என்னும் பன்றி அவதாரமெடுத்து ஜலாந்தரத்திலிருந்த பூமியை மேலே கொண்டுவந்து நிலைநாட்டினார்.

(அப்பொழுது நடந்து கொண்டிருக்கும் கார்த்திகை மாதத்தில் சுக்லபக்ஷம் நவமி திதியிலிருந்து க்ருதயுகமானது ஆரம்பமாயிற்று.)

இதன் பிறகு அந்த ஸ்வாயம்பு மனுவானவர் அதே வருஷத்தை த்வாதசி தினம் (பூமியைக்கண்ட மூன்றாவது நாள்) பூமியில் ப்ரவேசித்தார். இந்த ஞாபகத்திற்காகத்தான் இன்றும் க்ருதயுகாதி என்றும் அதே சுக்லபக்ஷ திதி நாளில், ஸ்வாயம்புவ மன்வாதி என்றும் பஞ்சாங்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்ரீவைகானஸ மஹரிஷி ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில்
– (ஆதார ஸ்லோகம்) –

"ஸ்வாயம்புவ மனோ:காலே யுகாதௌ சுக்லவத்ஸரே !!
ச்ரவணே ச்ராவணே சுக்லபூர்ணிமா ஸோமவாஸரே!
ஸிம்ஹலக்னேன ஸம்யுக்தே விகனாத் ப்ராப நைமிசம்!!"

விகனஸரானவர் க்ருதயுகத்தில் சுக்ல வருஷத்தில் ஆவணி மாதத்திய சுக்லபக்ஷத்து, பௌர்ணமியன்று, திங்கள்கிழமை தினம், திருவோணநக்ஷத்திரம், கூடிய காலை நேரம் ஸம்ஹ லக்னத்தில் நைமிசாரண்யத்திற்கு வந்தார் என அறியமுடிகிறது.

பிறகு ஸ்வாயம்புவ மனுவும் சதரூவை என்னும் ஒரு கன்னிகையும்,, ப்ரம்மாவின் உடலினின்றும் பிறந்து அவர்களிருவரும் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு ப்ரிய ப்ரதோத்தானன்,பாதுலர் என்று இரு புருஷர்களும் - ஆஹூதி, தேவஹூதி, ப்ரஸூதி என்று மூன்று கன்னிகைகளும் பிறந்தார்கள்.

அந்த ஆஹூதியை ருசிகருக்கும், தேவஹூதியை கர்தமருக்கும், ப்ரஸூதியை தக்ஷனருக்கும் கொடுத்து ஸ்வாயம்புவ மனுவானவர் கல்யாணத்தை நிறைவேற்றினார். அவர்களாலேயே ஸந்ததிகள் வ்ருத்தியாகி க்ரமமாக பூலோகத்தில் பூர்த்தியடைந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. I

இதற்கு முன்பு மானஸிக ஸ்ருஷ்டி என்பது தெரிந்ததே. மானஸிக ஸ்ருஷ்டி என்பது நினைவினால் பிறப்பிக்கக்கூடியதானது மஹாவிஷ்ணுவினாலும், ப்ரம்மாவினாலும் மட்டும் செய்யக்கூடியது. மேலும் இவ்விருவருக்கும் விகனஸ சப்தாபிதேயம் உண்டாகியிருக்கிறபடியினாலே இவர்களின் மானஸிக புத்ரர்களான எல்லோருக்கும் வைகானஸாபிதேயமே ஜகத்ப்ரஸித்தமான ச்ருதி, ஸ்ம்ருதி, புராணாதிகளிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீஹரிக்கும், ப்ரம்மாவுக்கும் விகனஸ சப்தாபிதேயம் உண்டு என்பது விஷ்ணு விஷயமான பாரதம் ஸஹஸ்ரநாமமென்னும் க்ரந்தத்தில் இருப்பதாலும், "நாராயணஸ்ய யஸ்யாத்மா விகனா இதிவர்த்ததே" என்று ஆனந்த ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடி நாராயணரான மஹாவிஷ்ணுவின் ஆத்மாவிற்கு விகனஸ் என்று பெயர் இருப்பதாலும் பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தில் - கோபிகா கீதையில் "விகனஸார்த்திதோ - விச்வகுப்தயே" - "விகனஸா ப்ரம்மணா" என்றும் இருக்கிறது. விகனஸ ப்ரம்மாவானாலும் என்ற மேற்படி பொருள் கொள்கிறபடி இவைகளால் ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்கும் - நான்முகனுக்கும் விகனஸ அபிதேயம் உண்டு என்பதாக அறியத்தக்கது.

I) பாகவதம் - மூன்றாவது ஸ்கந்தத்தில் ஸ்வாயம்புவ மனுவானவர் "ப்ரஜாவ்ருத்தி கதா" ப்ரஜைவ்ருத்தி கதையைச் சொல்வதாக ஒரு கதை உள்ளது. இதுவே மேற்சொன்ன விஷயத்தின் ஆதாரமாகும்.

வேதமானது வ்யாஸமஹாமுனியால் பிரிக்கப்படுவதற்கு முன்பேயுள்ள வேதத்திலிருந்து வைகானஸ சாகை என்ற பாகத்தை பகவான் விகனஸருக்கு உபதேசித்ததாகவும் மரீசி மஹரிஷியால் சொல்லப்பட்ட ஆனந்த ஸம்ஹிதையில் காணக்கிடைக்கிறது.

யாவத் ஸம்பிலிதாவஸ்தா வேதானாம் வ்யஸனாத்புரா!
தாம்துவைகானஸீம்சாகாமனாதாவத்யாபயன் முனிம்!!"

இங்கு முனி என்பதாலே விகனஸரை மட்டுமே குறிக்கும். வேத சமுதாயத்தில் வைகானஸ சாகை என்ற பிரிவு இருக்கிறபடியினாலே அந்த வைகானஸ சாகையையொட்டி விகனஸமுனி ஸூத்ரம் எழுதினபடியால் இந்த ரிஷி எழுதிய ஸூத்ரத்திற்கே வைகானஸ ஸூத்ரம் என்று பெயர். "ச்ரௌதம் வைகானஸம் ப்ரோக்தம்" என்று பத்மபுராணத்தில் சொல்லி இருக்கிறபடி வைகானஸ ஸூத்ரமானது ச்ரௌதம் என்பதைச்சொல்வதாக இருக்கிறது. இதனால் வைகானஸ ஸூத்ரம் வேதஸம்பந்தப்பட்டதென்று தெரியவருகின்றது.

இந்த ஸூத்ரத்தை அனுஷ்டிப்பவர்கள் எல்லோரும் வைகானஸர்கள் என்று சொல்லப்படுவார்கள். இந்த விகனஸரிஷிதான் வானப்ரஸ்த தர்மத்தை கூறியவர்.

புஷ்ப மூல பலைர்வாபி கேவலைர் வர்த்தயேத்ஸதா!
காலபக்வைஸ்வயம் சீர்ணை: வைகானஸ மதேஸ்தித:!!
விகனோமுனினா ப்ரோக்தம் ஸூத்ரம் வைகானஸம் மதம்!
வானப்ரஸ்தஸ்ய தத்ரைவ பூர்ணதர்மோபதேசத:!!

என்றபடி வானப்ரஸ்தர்கள் காலமுதிற்சியால் தானே உதிர்ந்த புஷ்பங்களினாலும் காய். கனி, கிழங்குகளைக் கொண்டும் எப்பொழுதும் ஜீவிக்கக்கடவது என்று வைகானஸ ஸூத்ரத்தில் இருக்கிறது. வான ப்ரஸ்தாச்ரம ஸ்வீகாரத்திற்கு வைகானஸ ஸூத்ரம்தான் முக்கிய ஆதாரமாக இருக்கும் காரணத்தினால் வானப்ரஸ்தர்கள் வைகானஸர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

வானப்ரஸ்தர்கள் வைகானஸர்கள் என்பது எப்படி?

சராசரஸ்வரூபியான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஆத்மாவிற்கு விகனஸ் என்று பெயர் இருப்பதாலும்; அந்த ஆத்மாவிலிருந்து பிறந்த ரிஷிக்கு விகனஸர் என்று பெயரிட்டாலும்; அந்த விகனஸமுனியால் சொல்லப்பட்ட ஸூத்ரம் வைகானஸம் என்று

சொல்லப்படுவதாலும்; மேற்படி ஸூத்ரத்தில் வானப்ரஸ்தாச்ரம விதி இருப்பதாலும், அதன்படி வானப்ரஸ்தாச்ரம ஸ்வீகாரம் செய்வதனாலும்; இந்த விகனஸரிஷியும் சிஷ்யர்களும் வனங்களிலே ஸஞ்சாரம் செய்து கொண்டு வானப்ரஸ்தர்களாய் இருந்ததாலும் இவர்களின் இந்த ஆச்ரமத்தாருக்கும் இந்த ஸூத்ரானுஷ்டானிகளுக்கும் வைகானஸர்கள் என்றும் வானப்ரஸ்தர்கள் என்றும் பெயர் உண்டாயிற்று. மேலும் அனேக இடங்களில் வைகானஸரிஷி என்று உதாஹரிக்கப்பட்டும் இருக்கிறது. வைகானஸ ரிஷி தமது சிஷ்யர்களுடன் நைமிசாரண்ய க்ஷேத்ரத்தில் ப்ரவேசித்து தபோநிஷ்டானுஷ்டராய் இருப்பதறிந்து ரிஷி வர்கங்கள் அங்கு பெருகலாயிற்று.

இந்த வைகானஸ ரிஷி தமது சீடர்களுடன் கூட ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில் பூலோகத்தில் நைமிசாரண்யத்திற்கு வந்து வைவஸ்வத மனுவின் காலம் வரையில் எங்கெங்கு இருந்தார்கள் என்று ஆராய்ந்ததில் திலீப மஹாராஜாவுக்கு வைகானஸ ரிஷி மாகஸ்நான விசேஷத்தைக் குறித்து விவரித்ததாக தெலுங்கு பாஷையிலுள்ள பத்மபுராணத்தில் காணக்கிடைக்கிறது. இந்த திலீபச் சக்கரவர்த்திக்கு ஸ்ரீராமஸ்வாமி ஐந்தாவது தலைமுறை பேரன் என்று மஹாகவி காளிதாஸரால் எழுதப்பட்ட ரகுவம்சம் என்ற க்ரந்தத்தில் சொல்லப் பட்டிருப்பதுடன் இந்த ஸ்ரீராமசந்தரமூர்த்தி வைவஸ்வதமனுவின் ஐந்தாவது த்ரேதாயுகத்தில் அவதரித்ததாக "ஸ்ரீராம காலநிர்ணய போதினீ" நமக்குத் தெளிவுபடுத்துவதால் இந்த வைகானஸர் திலீபச்சக்கரவர்த்திக்கும் முற்பட்டவர் என்பது நன்கு விளங்குகின்றது. மேலும் இந்த வைகானஸர்கள் இராமயணக்கதை நடந்த காலத்தில் கிழக்கே "ஸௌமனஸம்" என்னும் சிகரத்திலும், வடக்கே மைநாகபர்வத குகை ஒன்றில் ஒரு ஆச்ரமம் இருந்ததாகவும், சரபங்கருடைய ஆச்ரமத்திலிருந்த ஸ்ரீராமச்சந்தரமூர்த்தியை தரிசிக்க வந்து சென்றதாகவும்; மைநாக வனத்தில் வைகானஸ ஸரஸ் இருந்ததாகவும்; வசிஷ்டருடைய ஆச்ரமத்தில் வைகானஸர்கள் இருந்தார்கள் என்பதற்கும் ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் ஆதாரங்கள் காணக்கிடைக்கின்றது. ஸ்ரீமத்ராமாயணம் ஆதிகாவ்யமென்பதால் இதுவே முதல் ஆதாரமாகச் சொல்ல ஹேதுவாகிறது.

ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில் காணக்கிடைக்கும் ஆதாரங்கள்:

ஸ்ரீமத்வால்மீகி ராமாயணத்தில்: கிஷ்கிந்தா காண்டத்தின் நாற்பத்து மூன்றாவது ஸர்கத்தில் – முப்பத்திரண்டு மற்றும் மூன்றாவது ச்லோகங்கள் –

"தம் தேசம் ஸமதிக்ரம்ய ஆச்ரமம் ஸித்தஸேவிதம்!

ஸித்தானவகானலால்தத்ர வாலகில்யாச்ச தாபஸா:!!

வந்த்யாஸ்தேது தப: ஸித்தா: தாபஸாவீதகல்மஷா:!

ப்ரஷ்டாவ்யா சாபி ஸீதாயா: ப்ரவ்ருத்திர்விநயான்விதை:"!!

— ஆகையால் அந்த தேசத்தைக் கடக்கும் – பொழுது ஸித்தர்கள் நமஸ்கரிக்கக் கூடிய ஆச்ரமம் ஒன்று உள்ளது. அதில் அணிமா முதலான அஷ்டைச்வர்யங்களும் உள்ளவர்களும்; தபோ மஹிமை அடைந்தவர்களுமான வைகானஸர்களும், வாலகில்யர்களும் வசித்துக்கொண்டிருப்பார்கள். தவத்தின் பயனால் அணிமா முதலான எட்டு ஸித்திகளையும் அடைந்து பாபத்திலிருந்து விடுபட்டவர்களான அந்த மஹாத்மாக்களுக்கு நீங்கள் அவச்யம் நமஸ்காரங்களைச் செய்து மிகவும் வினயமாக ஸீதாதேவியின் வரலாறுகளைக் கேட்கவேண்டும் என்று ஸீதையைத் தேடுவதற்காக வடதிசைக்கு அனுப்ப நியமித்த சதபலி முதலான வானரர்களிடம் ஸுக்ரீவன் சொல்லி அனுப்பியதாகக் காணக்கிடைப்பதால்; அது சமயம் வைகானஸர்கள் அங்கு இருந்ததாக அறியமுடிகிறது. மேலும்!

"ஹேம புஷ்கர ஸம்சன்னம் தஸ்மின் வைகானஸம் ஸர:! *

தருணாதித்ய ஸங்காசை: ஹம்ஸைர் விசரிதம் சுபை:!!

என்ற சுலோகத்தின் மூலம் அங்கு "வைகானஸ ஸரஸ்" ஒன்று இருந்ததாகவும் அறிய முடிகிறது.

ஆகையால் இளஞ்சூரியன் ஜோதிக்கு ஒப்பாக ப்ரகாசித்துக் கொண்டிருப்பதாகவும் ச்ரேஷ்டமான அன்னபக்ஷிகளின் வசிப்பிடமாயும் பொன்னிறமான சுத்தஜலம் நிறைந்த வைகானஸ தீர்த்தம் இருக்கிறது என்றும்; அங்கு வைகானஸர்கள் வசிப்பது காரணமாகவே அந்த தீர்த்தத்திற்கு வைகானஸ தீர்த்தம் என்று சொல்லப்பட்டதாகவும் ஊஹிக்கமுடிகிறது.

M.L.J.Press Publication Ramayanam Page No.500

அதே போன்று கிழக்கு திசையில் ஸௌமனஸ மலைகளில் வசித்ததற்கான ஆதார ச்லோகங்கள் கிஷ்கிந்தா காண்டத்தில் அறுபதாவது ஸர்கத்தில் காணக்கிடைக்கின்றது.

தத்ர வைகானஸா நாம வாலகில்யா மஹர்ஷய:!

ப்ரகாசமான த்ருச்யந்தே ஸூர்யவர்ணாஸ்தபஸ்வின:!!!

என்று சொல்லியிருப்பதால் ஸீதாதேவியைத் தேடுவதற்காக கிழக்கு திசைநோக்கி அனுப்பப்பட்ட வினதனிடம் ஸுக்ரீவனானவர் – ஸௌமனஸ சிகரத்தில் மஹாதபோதனர்களாயும் திவ்ய தேஜஸ்ஸுடன் ஜ்வலித்துக் கொண்டும் அங்கு இருக்கக் கூடிய வைகானஸர்களிடமும் வால்கில்யர்களிடமும் ஸீதாதேவியைப் பற்றி விசாரிக்குமாறு ஆக்ஞையிட்டதாக அறிய முடிகின்றது.

மேலும் இராமாயணம் ஆரண்ய காண்டத்தில் ஆறாவது ஸர்கத்தில் –

சரபங்கே திவம்யாதே முனிசங்கா: ஸமாகதா:!

அப்யகச்சந்த காகுத்ஸ்தம் ராமம் ஜ்வலித தேஜஸம்!!

வைகானஸா வாலகில்யா: ஸம்ப்ரக்ஷாலா மரீசிபா:!

அச்மகுட்டாச்ச பஹவ: பத்ராஹாராச்ச தாபஸா:!2

என்றிருப்பதால் வைகானஸர்களும், வாலகில்யர்களும், ஸம்ப்ரக்ஷாகளும், மரீசிகள் முதலான முனீச்வரர்கள் சரபங்கரின் ஆச்ரமத்தில் ஒரு நாள் தங்கியிருந்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியை தரிசிப்பதற்காக வந்தார்கள் என்று இதன் மூலம் அறிவதால் அச்சமயம் தண்டகாரண்யத்தில் வைகானஸர்களும் வசித்திருந்ததாக அறிய முடிகின்றது.

"வைகானஸர்கள்" என்ற பதத்திற்கு விகனஸ முனினா ப்ரோக்தம் ஸூத்ரமதிக்ருத்ய தன்மார்கானுஸாரிணோ வைகானஸா:" அதாவது:- விகனஸ முனியினால் எழுதப்பட்ட ஸூத்ரத்தை அனுஷ்டிப்பவர்கள் எல்லோரும் வைகானஸர்களே என்று மஹேச்வர தீர்த்தர் என்பவர் பொருள் கூறுகிறார். எனவே வைகானஸர்கள் அனைவரும் விகனஸ முனியால் எழுதப்பட்ட

1) M.L.J.Press Publication Ramayanam Page No.494

2) M.L.J.Press Publication Ramayanam Page No.306

ஸூத்ரத்தை அனுஷ்டித்தவர்கள் என்றுத் தெளிவாகக் கூறமுடிகிறது. ஸ்ரீமத்ராமாயணம் பாலகாண்டத்தில்

"ரிஷிபிர்வாலகில்யைச்ச ஜபஹோம பராயணை:!

அந்யைர் வைகானஸைச் சைவ ஸமந்தாதுபசோபிதம்!!1

என்றிருக்கிறபடியால் - வஸிஷ்டருடைய ஆச்ரமமானது, ஜபஹோமம். வேதபாராயணம் முதலிய கார்யங்களைச் செய்யும் வைகானஸர்களாலும், வாலகில்யர்களாலும் நிறைந்திருக்கிறது என்று அதன் பொருள் கிடைப்பதால் வஸிஷ்டருடைய ஆச்ரமத்திலும் வைகானஸர்கள் இருந்ததாகத் தெரிகின்றது. அக்காலமானது வைவச்வத மனுவின் கடைசியான ஐந்தாவது த்ரோதாயுகம் நடந்துவரும் சமயமாகும். இதே வைவச்வத மனுவின் இருபத்தெட்டாவது யுகமான த்வாபரயுகத்தில் காம்யவனத்தில் இருந்ததாக ஆதாரங்கள் காணக்கிடைக்கின்றன.

"வைகானஸானாம் ஸித்தானாம் ரிஷ்ணாமாச்ரமப்ரிய:!!2

என்று ஸித்திபெற்றவர்களான வைகானஸ ரிஷிகளுக்கு பிரியமான ஆச்ரமங்கள் காம்யவனத்தில் இருக்கினதென்று கதை சந்தர்ப்பத்தில் தர்மபுத்ரரிடம் தௌம்யாசாரியார் சொன்னதாக அறிய முடிகிறது. மேலும் அதே பர்வாவில் தீர்த்தயாத்ரா ஸமயத்தில் குஷ்யச்ருங்கோபாளக்யானத்தில் யுதிஷ்டிரர் லோமசரைப்பார்த்து

"உபஸ்ப்ருச்யே ஹவிதிவ தஸ்யாம் நத்யாம் தபோபலாத்!

மாநுஷ்யா தஸ்மி விஷயாதபேத: பச்ய லோமச:!!

ஸர்வான் லோகான் ப்ரபச்யாமி ப்ரஸாதாத்தவ ஸுவ்ரத !

வைகானஸானாம் ஜபதாமேஷ சப்தோ மஹாத்மனாம்!!3

என்பதாக வைதரணீ நதீ தீரத்திலிருந்து கொண்டு இந்த நதீ தீர்த்தத்தில் ஆசமனம் செய்து தவமஹிமையால் மானிடப் பிறவியிலிருந்து விடுபட்டேன். ஓ! லோமச மஹாமுனியே உனது அனுக்ரஹத்தால் ஸர்வ உலகங்களையும் தரிசிக்கிறேன். தபோமஹிமை கொண்ட மஹாத்மாக்களான வைகானஸர்களின் வேதகோஷங்கள் கேட்கின்றன என்பதாகச் சொல்லி

1) **M.L.J.Press Publication Ramayanam Page No.74**

2) இது ஸ்ரீமஹாபாரத ஆரண்யபர்வத்தில் என்பதாவது அத்யாயத்தில் பதினாறாவது ஸ்லோகம்.

3) இது ஸ்ரீமஹாபாரத ஆரண்யபர்வத்தில் நூற்றுபதி மூன்றாவது அத்யாயத்தில் பதிநான்காவது ஸ்லோகம்.

த்ருசதம் வை ஸஹஸ்ராணி யோஜனானாம் யுதிஷ்டிர:

தத்ர த்வனிம்ச்ருணோம்யேனம் தூஷ்ணீமாஸ்வ விசாம்பதே!!1

என்று லோமசர் தர்மபுத்ரரிடம் திரும்ப பதிலளித்தார். அதாவது ஓ! தர்மபுத்ரா இந்த வைகானஸர்களின் த்வனியை (சப்தத்தை) மூன்றுலக்ஷம் யோஜனை தூரத்திற்கு அப்பால் இருந்து கொண்டே கேட்கிறாய். இது நீ மேலே சொன்ன நதியான வைதரணியில் ஆசமனம் செய்து புண்யபுருஷனாக ஆன காரணத்தினால் தான் முடிகிறது என்பதை அறிவாயாக - என லோமசர் தர்மபுத்ரரைப் பார்த்துக் கூறுகிறார்.

சைத்யாச்சைதே பஹ்வீதாஸ்த்ருத சானான்யுதிஷ்டிர:!

ஏதச்சந்தரமஸஸ் தீர்த்தம்ருஷய: பர்யுபாஸதே!!

வைகானஸா வாலகில்யா: பாவகா வாயுபோஜநா:!!2

ஓ! தர்மபுத்ரா அனேகவிதமான இந்த யாகசாலைகளும் தெய்வத்தன்மையுள்ள சந்த்ரமஸ தீர்த்தமும் ஆகிய இவைகளை மஹாமேன்மையுள்ளவர்களும்; காற்றையே ஆஹாரமாக உட்கொள்பவர்களுமான ரிஷிகளான வைகானஸர்களும், வாலகில்யர்களும் அனுபவிக்கிறார்கள் என்பதாக லோமசர் தர்மபுத்ரருக்கு கூறினார் என்பதாகும்.

விகனஸ ரிஷியானவர் தமது சிஷ்யர்களுடன் பூலோகத்திற்கு வந்து தற்காலத்திற்கு எவ்வளவு வருஷங்கள் ஆகின்றன? என கணக்கிட்டுப் பார்த்தால் - ஸ்வாயம்புவ மனு பூலோகத்திற்கு வந்த ப்ரபவ வருஷத்தை அடுத்து வரும் சுக்ல வருஷத்தில் விகனஸ மஹரிஷியும் பூலோகத்திற்கு வந்திருப்பதாக அறிய முடிவதால் தற்சமயளம் நடந்து வரும் வைவச்வத மன்வந்த்ரத்திற்கு கடந்த வருஷங்களைக் கணக்கிட்டால் க்ருதயுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்பதான நான்கு யுகங்களுக்கும் மொத்த வருஷங்கள் (4320,000) நாற்பத்து மூன்று லக்ஷத்து இருபதாயிரம் வருஷங்கள் கூடியது ஒரு மஹாயுகம் எனப்படுகிறபடி ஒரு மனுவின் ஆட்சிகாலம் எழுபத்தோரு மஹாயுகங்கள் என்று ஏற்பட்டிருப்பதால் ஒரு மனுவின் வருஷங்கள்

1) ஸ்ரீ மஹாபாரத ஆரண்யபர்வத்தில் நூற்று பதிமூன்றாவது அத்யாயத்தில் பதினாறாவது ஸ்லோகம் இது.

2) இதே ஆரண்யபர்வத்தில் நூற்று இருபத்தைந்தாவது அத்யாயத்தில் பதினேழு மற்றும் பதினெட்டாவது ஸ்லோகங்கள்.

மொத்தம் (30,67,20000) முப்பது கோடியே அறுபத்தேழு லக்ஷத்து இருபதாயிரமாகும். இதேபோல கடந்த (ஸ்வாயம்புவ, ஸ்வாரோசிஷ, உத்தம, தாமஸ, ரைவத சாக்ஷுஸ என்பதான) ஆறு மந்வந்தரங்களுக்கும் சேர்த்து சென்ற ஆட்சிகாலங்கள் (1840320000) நூற்றெண்பத்து நாலு கோடியே மூன்று லக்ஷத்து இருபதாயிரம் வருஷங்கள் சென்றிருப்பதோடு; தற்போது நடந்து வரும் ஏழாவதான வைவஸ்வத மனுவின் காலத்திற்கும் நடந்து முடிய வேண்டிய மஹாயுகங்கள் எழுபத்தொன்றில் இருபத்தேழு மஹாயுகங்கள் முடிந்து இருபத்தெட்டாவது மஹாயுகமானது இப்பொழுது நடந்து வருகின்றது. 1

வைவஸ்வத மனுவின் சென்ற இருபத்தேழு மஹாயுகங்களின் மொத்த வருஷங்கள் 11,66,40000 ஆகும். இருபத்தெட்டாவது மஹாயுகத்தில் க்ருதயுகத்து மொத்தவருஷங்கள் –

க்ருதயுகம்	–	1728000
த்ரேதாயுகம்	–	1296000
த்வாபரயுகம்		864000
இப்பொழுது நடந்து வரும் கலியுகம் (1997க்கு)	–	5098
மொத்தம்		3693098
வைவஸ்வத மனுவின் ஆட்சிகாலம் சென்ற இருபத்தேழு மஹாயுகங்களின் மொத்த வருஷங்கள்		1840320000
இந்த கலியுகத்தில் இப்பொழுது நடக்கும் ஈச்வர வருஷம் 1997 வரை		120533098
ஆக		1960853098

1) மஹாஸங்கல்பே -- "வைவஸ்வத மந்வந்தரே அஷ்டாவிம்சதிதமே கலியுகே"

விகனஸ மஹரிஷியானவர் அவதாரம் செய்து இதுவரை (1997) சென்றுள்ள மொத்த வருஷங்கள் நூற்றுத்தொண்ணூத்தாறு கோடியே, எண்பத்தைந்து லக்ஷத்து, மூவாயிரத்து, தொண்ணூற்றெட்டு என்று கணக்காகிறது.

"ப்ரம்மாணம் ப்ரவதத்விஷ்ணும் ருத்யுக்தம் ஸ்ருஷ்டிகர்மணி!
முனிச்ரேஷ்டோ மயாஸ்ருஷ்டோ மத்கார்ய கரண க்ஷம!!

"பூர்வமேவ மயாஸ்ருஷ்டோ" என்பதாக ஆனந்த ஸம்ஹிதையில் சொல்லுகிறபடி உலகஸ்ருஷ்டிக்கும் முன்பே ஸ்ருஷ்டியான விகனஸ முனியானவர்

"ஸ்வாயம்புவ மனோ:காலே யுகாதௌ சுக்லவத்ஸரே!
ஸிம்ஹலக்னேன ஸம்யுக்தே விகனாத்ப்ராப நைமிசம்!!"

என்ற இந்த ஸ்லோகத்தை ஆதாரமாகக் கொண்டால் நடந்து கொண்டிருக்கும் கலியுக ஈச்வரள வருஷத்திற்கு நூற்றுத்தொண்ணூற்றாறு கோடியே எண்பத்தைந்து லக்ஷத்து மூவாயிரத்து தொண்ணூற்றேழு வருடங்கள் முடிந்து தொண்ணூற்றெட்டாவது ஆண்டாக ஸ்ரீவைகானஸ குலம் செழித்தோங்கி நிற்கின்றது.

ஸ்ரீவைகானஸ சரித்ரம் முற்றும்.

ஸ்ரீ:

!!ஸ்ரீமதே விகனஸாசார்ய மஹாதேசிகாயநம:!!

!!ஸ்ரீவிகனஸாசார்ய பதிருபயபத்தந்தாதி!!

திருவளரு மார்பனார் மனத்திற் றோன்றிச்
செய்யநான் மறைப்பொருளைத் தேர்ந்து வானிற்
றருவளரு நைமிசா ரண்ணி யத்திற்
றபோநிதியாய் விகனசெனுந் தனிப்பேர் பெற்ற
உருவளரு முனிவரற்கந் தாதி முற்ற
உலகமெலா மீன்றளித்தே யுவக்கும் மாலின்
குருவளரு மைம்படையைச் சேனை கோர்வை
குருகைநா தனைப்பணிந்து கழறு வாமே.

அருணிறையாய்த் தவப்பயனா யேம வைப்பா
யாருயிராய்க் கண்மணியாயனைபி தாவாய்
இருண்மலநீக் குங்கதிரா யெமைவந் தாண்டே
யிருநால(லு) க்கரவமுதை யிதையமாகப்
பருகவளித் தருள்பரத்து வாச கோத்திரப்
பாற்கடற்கோர் மதிபோல்வான் பரவுங் கோடித்
திருநகர்வாழ் சவுமியநா ரணனா ரென்னுந்
தேசிகனார் திருவடியைச் சிரமேற் கொள்வோம்.

மதியாம் மந்திர மதனாற்
றிலகமா யினிதுவீற் றிருக்கும் தேசிகர்
மதியாம் மந்திர மதனாற்
றிகழும்வே தாந்தவா ரிதியை
ஏர்கொளமத்தினு ஞானமா முதை
யினிதுணச் சமனசங் குழாங்கட்க்
கிங்கெடுத் தளித்த எம்மிறைவாசு
தேவனார் நைமிச வனத்தில்
தார்கொளும் விகனா – முனிவர னடிமேற்
சகலரும் புகழவந்தாதி

சாற்றுதி என்று வாய்மலர்ந் தருளத்
தழைத்தவவ் வருளினா லன்றோ
கூர்கொளும் மதியி லேனிதை மொழிய
றுற்றன னின்றிவே றின்றால்
குவலயத் தலகில் நூலுநன் குணர்ந்த
கோதிலாக் கவியின் வல்லோரே.

எழுசீர்க்கழி நெடில்

சீர்கெழு மதிபோ லிலங்கெழின் முகமுந்
திருவருள் கூர்விழி யினையும்
ஏர்கெழு தீர்க்க புண்டர நுதலு
மின்நிகர் குண்டல முடியும்
தார்கெழு நான்கு புயங்களுங் கருப்ப
சக்கிராங் கிதழுநன் கமையுந்
நீர்கெழு விகனா முனிவர னிருதான்
நெஞ்சினு ளிருத்திவாழ்த் துவமே. 1

வாழ்த்தநான் மறையாறங்காம வல்லிகள்
படரும் வான்றரு வதனால்
பாழ்த்தமா மாயைப் படரிரு ளறுக்கும்
பரிரியே பைந்தொடி யார்மால்
வீழ்த்தமா தவத்தோர் வியன்முடி மணியே
விளங்குவை கானசத் திறையே
ஆழ்த்தயென் பிறவிப் பரவைநீந் துதற்குன்
னடியினை யெனுங்கல மருளே. 2

அருளிறை மதுறை யன்பர்மீ தூற்று
மரியவம் போருக மலராய்
இருண்மல மகற்று மெழின்மணி விளக்கா
யிருந்தவத் தொருதனி மலையாய்
மருளறு மருந்தாய் வரன்றரு மழுதாய்
வயங்குவை கானசத் திறையே
கருள்கருங் குழலார்க் காள்செயா தெனையுன்
றெழும்பர்க்கே தொழும்பனாக் குவையே 3

ஆக்குத லளித்த லிவையே
யருள்வினை யாட்டதாய்ப் புரிந்துத்
தாக்குதல் புரியைம் படையுந் தரித்த
தடக்கைமான் மானசத் தடத்திற்
பூக்குமா மலர்போல் வந்தபுண் ணியனைப்
புகழும்வை கானச விதியை
நீக்குமா றின்றி மகிலத் திருந்து
நிமலனை நிகர்ப்பதார் நெஞ்சே 4

நெஞ்சமே விகனா முனிவர்சந் நிதியை
நீநினைந் துருகிலை சிரத்தாற்
கஞ்சநான் மலரைச் கடிந்தொளி செறிந்து
கழலணிந் திடுபத மலரைத்
தஞ்சமா மென்னப் பணிந்திலை வாயாற்
சாற்றிலை யவன்புகழ்ச் சரிதம்
அஞ்சலென் றுணையார் புரப்பவ ரந்தோ
வந்தக னனையுமப் போதே!. 5

போதனத் துறையும் புனிதனு மறியாப்
பொருளினை நைமிச வனத்தோர்க்
காதனத் திருந்தே யருளும்மா மணியை
யரியகவ கானச வழுதை
மாதனத் தழுந்தும் நாரண னுவப்ப
வழங்குமா னெழிலியை மறந்தே
ஓதனச் சுவைபின் னார்நலச் சுவைவேட்
டுறங்கினை யுணர்விலி யுளமே! 6

உள்ளம்வல் லிரும்போ வுருக்கதோ சிலையோ
வுனைநினைந் துருகிலா தென்னுங்
கள்ளமுங் கொலையும் பொய்மையுஞ் தவமுந்
தெள்ளருள் ஞான மும்சிறிதின்றித்
தீவினை மாதர்மா லென்னும்
பள்ளம்வீழ்ந் துழலு மென்செய்கேன் முனிவர்
பணிவிக னாரிய பாற்கரனே! 7

கரத்தினிற் றண்டு கமண்டலம் பரித்துக்
காமனார் சுருப்புவில் லுந்துஞ்
சரநினைப் பொருவு தடங்கணார் மாலாஞ்
சலதியைக் கடந்தருந் தவத்தோர்
சிரத்தினிற் பொலியுந் தெய்வவான் மணியே
திகழுவை கானசத் திறையே
பரத்தினை யருளும் பரமனார் சேயே
பரகனை யாள்வதுன் பரமே! 8

பரந்தரு மமுதாய்ப் பழமறைப் பொருளாய்ப்
பாற்கட லுறையுநா ரணனே
கரந்தரு ஞான முத்திரை யபயம்
கமண்டலம் தண்டமும் பரித்தே
வரந்தரு மெங்கள் விகனச குருவாய்
வற்கலை யணிந்துவா ளரவின்
சிரந்தரு மணிபோல் வந்தன னென்றார்
செப்புவ தியார் கொல்சீர்த் தியையே 9

சீர்த்தியுற் றிலகுஞ் சிற்குண முடையிற்
செங்கண்மா லைமனத் தெழுந்தே
ஆர்த்தியை முனிவர்க் ககற்றுமா ரமுதா
யனகனா யெனையுமே யருட்கண்
பார்த்தியை தரத்தம் பதமலரீந்த
பரமனாய் விகனச குருவாம்
மூர்த்தியை முன்னித் துதித்திறைஞ் சிடுமின்
முன்னை நாள் வினைச் செருக் கறவே 10

அறுசீர் ஆசிரிய விருத்தம்
[வேறு]

செருக்குறு மதமா விட்டில்
சோலை வண் டசுணம் போலத்
திருக்குறு மைவராலே
தினம்தினம் புன்க ணுற்றே
கருக்குழி புகாம லென்னைக்

காத்தருள் விகன சென்ன
இருக்குமா தவர்க ளேறே
யெந்தையே பரமன் சேயே! 11

சேயினை மனைவி தன்னைச்
செம்பொனை விழைந்த பொல்லா
நாயினை நீகாப்ப தென்றோ
நான்மறை மணக்கும் செய்ய
வாயினை யுடையாய் வைகா
னசவிதிக்கி றையே யார்க்குந்
தாயினை யனையாய் வாழ்த்துந்
தாபதர்க் கருளுங் கோவே! 12

கோவையா ருலக முற்றுக்
குலவரை நிகர்க்குங் கொங்கைப்
பாவைமார் போக நச்சிப்
பலமகம் புரிவீ ரென்னே
மாவைகா சைத்தைத் தந்த
வரமுனி யாருள்பெற் றீரேல்
பூவைப்பூ வண்ணன் வைகும்
புனிதவான் பதமுண் பின்றே 13

உண்டொரு கோலைங் கோலென்று
உவப்பவர் செருக்குச் சிந்த
கண்டனை செய்ய முக்கோல்
சுரத்தினிற் றரிக்குந் தூயோன்
பண்டை நான் மறையைக் கல்லும்
பரிசினால் விகன சென்று
கொண்டநா மத்தோன் கீர்த்தி
கூறுவா ருளகில் யாரோ! 14

உலகமா மகன்மு கம்போ
லொளிரு நெமிசவ னத்தே
பலகலை நன்குணர்ந்த
பரமளஞா னியர்கு ழாத்துட்

டிலகமாம் விகன சென்னுந்
தேவனா ரருள்பெற் றுய்மின்
கலகமார் விழியார்ப் புல்லிக்
காலம்வீண் கழிக்கின் றீரே!

கழித்திடு மிளமை மூப்புக்
கலந்திடுங் கபமும் வாயின்
வழிந்திடும் நடைதள் ளாடும்
வருஞ்சம னோலை நெஞ்சே
எழுந்திடு கவலை நந்த
முதம் விகன சென்ன
மொழிந்திடு என்று மூவா
முனிவரன் அருள்பெற் றுய்யே

உய்யவும் வழிவே றின்றி
யுன்னடி நிழலைப் புல்லும்
வெய்யனை யாள்வ தன்றோ
வீங்கறம் விரிஞ்ச னாதிச்
செய்யவா னவர்கள் போற்றுந்
திருமள் விழைந்த வாழிக்
கைய்யனார் மனத்தெ ழுந்து
கருணைபூத் தொளிருந் தேவே

தேவன்நம் விகன சென்னுந்
திருமுனி திருமகட் க்கும்
காவல்நா ரணர்க்கும் நற்சேய்
காசிபன் பிருகு வாதி
நாவலர்க் கரிய தந்தை
நான்முகன் முன்னோ னென்றே
காவலிற் புலனைந் துய்த்த
கருணைவா ரிதியே வாழ்த்தே

வாருதி யகமம் போல
வளர்ந்தேன் னீவனசை நந்தற்
சாருதி தந்தைதாய் நற்

சற்குரு வவனே யென்று
ஓருதி விகன சேயென்
நுரைக்குதி வினைகள் யாவுந்
தீருதி யினிமற் றுண்டோ
செய்யுமா தவங்க ளெஞ்சே 19

மாதவன் விகன சென்போன்
மனதறா திருந்து கொண்டேன்
மீதவீன் கருணை கூர்ந்து
விரிமலர்ச் சரண்தந் தாண்டான்
போதவன் பராரி தேவர்
புனிதஞா னியர்கள் போற்றும்
மாதவ னருளும் வானம்
மருவுதற் கருமை யென்னே! 20

கலி விருத்தம்
[வேறு]

என்னைக் காயு மைந்ததிந் தியாதபந்
தன்னை நீக்கச் சரணிழ லீவையோ
அன்னை யான வலர்மகட் கன்புறும்
மன்னை வாழ்த்து வைகானச் வள்ளவே! 21

வள்ள லிந்திரன் மந்திரி கும்பசன்
மள்ள ரன்ன மனிதரை வாழ்த்துவீர்
தெள்ளு ஞான த்திருமறை வாய்மலர்
விள்ளுஞ் சீர்த்தி விகனைசப் பாடுமே 22

பாடு றுஞ்சிவன் பங்கய னிந்திரன்
நாடு றுந்திரு நாரண னாருறை
வீடு றுங்கொல் வினையேற் கருளெனும்
மாடு றும்விக னாமுனி மன்னனே! 23

மன்னு வைகா னசமெனும் வாரிதி
துன்னு(ம்) வழிக்குச் சுருதிக ளின்குழாம்

பன்னு நந்தப் படையைப் பரித்தமால்
என்னு முத்த மெளிதினிற் கிட்டுமே! 24

கிட்டு நீள்பொருள் கேடுறு மோடென
வட்டு வார்முலை மங்கையர் தாயென
விட்டு னார்க்கரு ளும்விசு னாரியன்
தெட்டு கும்முள தியனை யாள்வனே! 25

ஆளு நான்மறை யந்த ணர்க்கருள்
நாளு நல்கிய நம்விக னாமுனி
தாளு மானன முந்தடக் கைகளும்
தோளுமென் னகத்தைச் சூரை கொள்ளுமே 26

கொள்ளை வண்டுநற் கோடுறு மாமலர்
கள்ளை யுண்டு களித்திடு மாறுபோல்
தெள்ளு சீலத் திருவிக னாரியன்.
விள்ளு போத வினைமது வுண்பரே! 27

பராக மன்னிய பைந்துள வத்தொடை
வராக னாந்திரு மாலின் மனத்தெழும்
விராக ஞான விகனசை மேவினேன்
நிராக னைங்கணை நீக்குதற் குன்னியே. 28

உன்னி ருந்திரு வோங்கள கேப்பதி
மன்னன் வானவன் வாசவன் போல்வளந்
துன்னு வார்நின் றொழும்பர் நிகர்ப்பரோ
மின்னு போத விகனச நாதனே! 29

நாத ராகவன் நாரண னாரருள்
போத ராகம் பொருந்தும் விகனசாம்
பாத ராக மலர்த்துணை பற்றுமின்
மாத ராக மயக்கறு மாந்தரே! 30

அருணீர் வண்ணம்
[வேறு]

தரநாக வாயி னுறுதேரை யான
சகவாழ்வி னீர்கழ்லு வேற்
கரணான செய்ய சரணார விந்த
மலரென் றவித் தாளுவாய்
வரமாத வத்தர் முடிமீ திமைக்கும்
மணியேவி களசே திருப்
பரவாச தேவா மனமீ தெழுந்து
பரவும்பர் வாளமுதே

வானந் தொடர்ந்த மழைவாவு சோலை
மலர்நாறு நைமிசவனத்
தானந்த வாரி யனையா யெவர்க்கு
மனையான செய்யவனசத்
தானத் தவாத திருமாது கந்த
தனயாவி களசேயெனை
மானந்தநந்த னடியா ரடிக்கு
வழிபாடு செய்ய வருளே!

அருளே விளைந்த விகனா ரியன்ற
னருளாலஞ் ஞானவிருளாம்
மருளே தவிர்ந்து மருலகரந்த
செய்யவ னசத்தி னுறையுந்
தெருளோர் வணங்குந் திருவைப் பணிந்து
திசையானன் னளகிலாப்
பொருளே யடைந்து புகழேந்தி வாழ்தி
புகலொன்றி லாதவுளமே!

உளநரலு வேத முயரங்க மாறு
முளதாம னாக்கணுறையுங்
குளமே நிகர்த்த மொழிமங்கை யிதமுள
கூறுஞான நதிபாய்
பளமான நந்தம் விகனாரி யன்றன்
பணியுள்ள திந்தநெறியால்

வளமே நிறைந்த திருமால பதத்தைத்
மருவர்க்கென் வாழி மனனே! 34

மனையுஞ் சிறந்த புவியும் பரிந்த
மடவார்ம காரின் விழைவேட்
டனையுந் துறக்கு நெறியொன்றிலாத
தரையீர் தளிர்த்த குவளை
நனையும் செழித்த பதுமங்கண்மலருந்
தடநை மிசத்தினருளால்
அனையா மெவர்க்கும் விகனாரியன்ற
னடிசேர்மின் வானமெளிதே 35

எளிதிங்கு செய்யு மறமாதி மூன்று
மினியும்ப ராளுமறியா
களிதங்கு மாவோ டமர்வாசு தேவர்
கருணா கரத்தின் முழுகி
ஒளிசங்கொ டாழி யமரத்தராகி
யுயர்முத்த ரோடுறைகுவீர்
அளிதங்கு செங்கண் விகனாரியன்ற
னடிசூடி யுய்ந்திடுமினே! 36

மின்னார் மயக்க விருளிற் புகுந்து
விடையாதி தன்னி னுழல்விற்
றொன்னார் நிகர்க்கு மனதைத் திருத்தி
ஒளிதங்கு நினது புகழைப்
பன்னாத காதபவ மேறவெண்ணு
பதகற் கெவ்வாறு வருமா
துன்னாகர் மைந்த விகனாரியர் சொல்
துகளொன் றிலாத பதமே. 37

ஒன்றே யெனக்குன் னடியம் புயத்தை
யொருகா நினைந்து ளுருகி
நின்றே வணங்க லரிதா யிருக்க
நிகரற்றுயர்ந்த தவமாங்
குன்றே யருட்கோர் கடலே மெஞ்ஞான

குருவே விகன சையுனக்
கன்றே யளித்த லெளிதாகு மென்னை
யறமாதி நான்கு பொருளே! 38

பொருளாகி யெங்கு நிறைவாகி புனிதர்க்க
மெண்ண வறி பாதி
தெருளாகி மங்குல் நிறமாகி வைகு
திருவாரணர்க்க மகவாய்
அருளாக விங்கு வவதார மான
விகனாரியா வுன்னடியை
மருளார் பிறப்பி லெவையெய்தி னாலு
மதவாதிருக்க வருளே 39

அருமா தவத்து நிதியா முனிக்கு
வரசாய் மறைப் பொருளதாம்
திருமா தவர்க்கு மகவா யருட்கோர்
நிறையா யஞ்ஞான விருளை
பொருமா தவர்க்கு நிகராய் விளங்கு
புனிதா விகன சேயினி
வருமா தர்க்கொங்கை மகவாயுணாது
வர ஞானமென் றருள்வையே! 40

எண்சீர் விருத்தம்
[வேறு]

வையார்ந்த மூவிலைவே லானுந் துய்ய
மலரயனு முனிக்கணமும் வணங்கியேத்தப்
பையளந்த வரவணையிற் பள்ளி கொள்ளும்
பரமனா ரருளடையப் பரிவு கூர்வீர்
மையார்ந்த விழிமலராள் மகிழ்ந்து நோக்குமம்
மாமணியாய் மாதவத்தோர் நிதியா யன்னஞ்
செய்யார்ந்த நைமிசத்தி லுறையு மெங்கள்
தேவவிகனா ரியனைச் சிந்திப் பீரே 41

சிந்துமதுப் பெருக்கெடுக்குங் கமலப் போதிற்
றேனுண்டே யனசபாடுஞ் சிறையார் வண்டர்

நந்துறிறு தேன்றுளிகொள் முளரிப் பூவை
தன்னாத வாறேபோல் ஞானியார்க்கே
பந்துவித னாரியனா ரமுத மீயும்
பதகமலத் திணைமனத்திற் பரிக்கந் தூயோர்
இந்து நுதல் மடந்தையர்மார் சலதி மூழ்கி
மிவ்வுலக வாழ்க்கைநல மெண்ணா ரன்றே.

எண்ணியெண்ணி நினதுபுகழ்ச் சரித மான
வின்னமுது மருந்தாதென் னிதைய வண்டர்
கண்ணியர்கள் புண்ணுடலிற் சுழன்று செய்ய
கனியிதழின் தேனுகரக் கருது மந்தோ
நண்ணியதைத் தடுத்தன்க் கரிதோ யெங்க
ளாயகமே குலவிளக்கே நவையில் பேறே
மின்னிமையோர் முனிக்கணங்கள் போற்றுந் தேவே
விகனசெனத் தூயோர்கள் விளம்பும் கோவே

கோவைபரம் பொருவேலை நிகர்க்கு மென்றும்
சூலவரையைப் புரையுமவர் குயமென்றும் புன்
பாவையரைப் புனைந்துரைத்துப் பயன் பெறாத
பாவலர்கள் பாற்கடலைப் பதித்துச் செய்ய
மாவையுரத் தணிந்த மாஅல் மனத்த டத்து
மறைமலர் போல் அவதரித்த விகன சென்னும்
தேவையடைந் தவன்புகழா ரமுதப் பாவாம்
செப்புளமே தரியப்பாடி திகழ்தல் நன்றே 44

நன்றாநின் றிருவடிக்காட் பட்ட வன்றே
ஞானமாம் சாகரத்தி னமுத மொண்டு
சென்றாயு மனபர்குழாக் குன்றிற் பெய்யும்
செழு முகிலே விகனசெனும் தேவே காந்தி
குன்றாத மாமணியே தவத்தோர் வாழ்வே
கூறுமுட லாவிபொருள் மூன்றுங் கொண்டாய்
ஒன்றாலும் விலக்கரிய விருளைப் போக்கி
யுயர்பதத்தை யருள்வதுநிற் குரிய தன்றே 45

உரியமறை வேதநன்காய்ந் துணர கில்லீ
ருயர்திரு மந்திரப்பொருளாய்ந் துவக்க
அறியவறஞ் சிலர்கள் பாற் செய்ய கில்லீ
ராரியனா யன்பர்களுக் கருளும் செய்ய
கரியதிரு வடிமேனிக் கண்ணன் னீயும்
கதியடைய விகனசெனக் கருணை மல்கு
துரியநிலை யவர்பொற் ருளகத்தே வாழ்த்தித்
தொழுகில்லீர் வினையகற்றுஞ் சூழ்ச்சி யாதே 46

யாதவர்க்கோர் குலவிளக்காய் அவத ரித்தே
வானை மருப் பொசித்தகவி யிருளைக் காயும்
ஆதவனாய்க் கோவியர்கள் கோவாம் பானல
லாவதற்கோர் நிறைமதியாய் அண்ட முண்ட
மாதவன்மா தனச்சலதி நின்று தித்த
வரவிகனா ரியவமுதை விழிக ளாரக்
கோதவநீங் கப்பருகும் சுமன சற்கே
கூறுசனமச் சரையென்றுங் குறுகா தன்றே 47

அன்றேயா வைப்பரமவென் னறிவாந் துய்ய
வார்மதியைச் சூழ்ந்துபற்ற அணியார் செம்பொன்
குன்றேயும் விகனசெனும் கோவின் செய்ய
குணஞ்செவிக்க வொளிகிளர விலகிற் றம்மா
ஒன்றாலு மளக்கரிதாய்ப் பிரம னாதி
யுலகளவாம் துறை குமிழி திரைகள் வீசும்
யென்றார ணம்புகழ்நா ரணணாம் வேலை
யின்பநீர் படிதலினி யினிய தாமே 48

இனிய வெழிற் புன்னிரையும் திருமா லென்று
மிணையில்லாப் பயேத்தியிற் றோன்றிப் பூவின்
மனிதருக்காய் வந்துவிழை பயன்கள் யாவும்
வழங்குவிக ன்ாரிய்னாம் சுரபி தன்னைக்
கனிவுளத்தோ டடையாது சிறிது நல்காக்
காசியினிற் கயவர்களாம் மலட்டர் பற்றி
முனியவுமே யுளம்வருந்திப் பின்னும் பற்ற
முயலுகின்ற நார்க்கியாது மொழிய லாமே 49

மொழியதரம் குயில் கொவ்வை நிகர்க்குஞ் செய்ய
முளரிமலர்த் திருவுவந்த புதல்வ னாகி
விழிமலர்போல் விகனசெனத் தோன்றி லானேல்
விளங்கு வைகானச மென்னும் விதிதா னெங்கே
அழிவில்லாக் கண்ணனா ரருளாற் செய்யு
மரிச்சாவ தாரமெங்கே யனைத்து முய்யு
வழியெங்கே திருவாரா தனமும் எங்கே
மருவினிய பத்தியெங்கே வையத் தோர்க்கே 50

வஞ்சிவிருத்தச் சந்தம்
[வேறு]

வையார்விழி மங்கையர் மைந்தரெனச்
செய்யார்வ மிகந்து சிறந்தவளைக்
கையார்திரு மால்கழல் காணவருள்
ஐய்யாவிக னாரிய னாமரசே 51

அரண்பரி யங்கன் மலைக்குடையான்
தரவந்த வைகான சனத்தெருவே
சிரநான்மறை தேடரி தாயொளிரும்
பரவனெழுத பலமிகுவதே 52

தேதேயென மொய்த்திசை தேன்முரலும்
தாதேயும் மலர்செறி தார்புனையும்
மாதேவனவ் கானச வாரிதியில்
போதே அருள் பொற்புறு நற்பதமே 53

பதனம்பத னம்பர வைப்பொறிகாள்
மதனம்முனம் வாரிதி யிற்செயுமால்
சுதனம்வி கனாரிய னைத்தொழுதேன்
விதனம்தரு தீவினை வேறறவே 54

அறவாழிவை கானச வண்ணலடி
மறவாது வணங்கி வழுத்தினையேல்
பிறவாநெறி சேர்குவை பேதமையைத்
துறவாய்துற வாய்துயர் கூர்மனனே ! 55

கூராழி அணிந்த குணக்கடலே
சீரசாரு பரம்தரு தேவெனலே
தேரஉள மல்கிய தீயஇருள்
தோராதவ நோன்விக னாழுனியே ! 56

முனிராகதர் பெய்ம்பபற வாளிதொடும்
தனிராகவ னார்கழல் சார்குவையால்
இனிராக மிகந்துவை கானசனை
பனிரார்க பதத்துணை பற்றகமே 57

அகலாய்வெளி யாய் உறை யண்ணல்தரு
மகனாளு மதைபொருள் நன்கறியும்
விகனாரிய னாரருள் வெள்ளமேயந்,
தகனார்தரு தரவம விப்பதுவே 58

அவினாலுகை அந்தண ரந்தவர்கள்
புவினாதர் புகழ்ந்திடு நிழற்குரும்
கவினாலுவை கானசர் தம்மிறையாய்
கவினாலு கரத்தொளிர் கற்பகமே 59

பகவான்வளர் பங்கய மாதிருவர்
மகவாயவை கான்ச வள்ளலடி
இகவாது பழிச்சினர்கட் தெளிதே
சகவாழ்வை இகந்தவர் சார்கதியே 60

கலிவிருத்தம்
[வேறு]

தியாதென வோர்கிலை யைம்புலக் கள்வர்வைக
பொதியா வுடற் காவ லொழித்தலை பொய்மையென்று
பதியா துலக மயனீக்கிலை வையய மேத்தும்
நிதியாம்விக னாரியர் போற்றிலை நீசநெஞ்சே 61

நெஞ்சிற்குடி கொண்டெனை யாட்கொண்டு நீயிருக்க
மஞ்சிற் கரிய சமனாற்கொரு வன்மையுண்டே
நஞ்சிற் பயின்ற விழிமாதர் நலந்துறந்தோர்
செஞ்சொற் பரவுவம் விகனாரிய சீலரன்பே 62

அன்பா யகத்திற் புறத்திற்றுற ந்தசீலர்.
தன்பான் மகிழும் விகனாரிய சாந்தமிக்கோய்
உன்பா லருளா நநதியிற்படிந் தாலுமுண்டோ
என்பான் மருவும் சுடுதாபத் தினிற்பிறப்பே 63

பிறப்பாஞ் சலதி துனைந்தாழ்ந்திடுபேதையேற்குன்
சிறப்பாஞ் சரணப் புணையல்லதோர் திக்குமுண்டோ
அறப்பா வலர்சூழ் விகனாரிய வாதரித்தோர்
மறப்பா மிருளைக் கடிந்தோட்டிடும் வான்விளக்கே 64

விள்க்கந் தருநன் மணிபோலெங் கணிவிளங்கிற்
நுளக்கந் தருதீ வினையாமிருள் சூழவற்றோ
களக்கன் புரையம் பொறிவரதே கடிந்துளோர்க்கும்
அளக்கற் கரிய விகனாரிய வன்பர்கோவே 65

கோவோர்ந்த செம்பொற் குவவட்டைப்புரை யும்குணத்தோர்
மாவாற் றுதிக்க மிசைமுன்னென் பயன்படாவோர்
நாவாற் பிதற்று மொலிநின்செவி நண்ணுங் கொல்லோ
தேவா விகனாரிய சீலர்கட் காதலோனே! 66

காதங் கமழு மலர்நைமிசக் கானமர்ந்த
வேதங் கசியும் மலர்வாய் விகனாரியன்றாட்
பூதங் கமல வுளத்தோர்ளவ ரென்னைப் புல்லும்
ஏதங் களைந்தே யெழில்மால்பதத் தேற்றுவோரே 67

ஏற்றுப் புவியை யளந்தான் றாளென்னும்மிக்க
வாற்றுப் பெருக்கிற் படிந்தாடிநல் லன்பராவார்
மாற்றற் கரிய மலமாமிருள் மங்குலோட்டும்
காற்றைப் புரையும் விகனாரியற் காணுவோரே 68

காணிற் புவியே மனைமக்களைக் காஞ்சனத்தைப்
பேணித் திரிவீர் விகனாமுனி பேரின்பத்தைப்
பாணித் தலத்தால ருளும்நெறிய பண்முகத்தை
வீணிற் றிரிந்தீர் விரைவிற் செலு நைமிசத்தே ! 69

சாத்தாகிச் சித்தாய் தனியானந்த மாய் சகத்தின்
வித்தாகி நின்ற பெருமான்பத மேயருட்செய்
முத்தாகி ஞான முதலாய் முகிழ் கற்பக்பூங்
கொத்தாய் விளங்கும் விகனாரியன் கோதிலோனே 70

கலிவிருத்தம்
[வேறு]

கோதறு விகனச குருவின் செய்யதோர்
தாதுறு மலர்ப்பதம் தலையிற் சூடுவோர்
காதுறு கயல்விழி கமலை மின்னருள்
போதினைத் தளித்திடு புனித ராவரே. 71

மாய்பு
[வேறு]

புனிதனாவிக னாரியன் பூங்கழற் றுணையைக்
கனிதநிளமையிற் பணிந்திடு கசட்டுறு மனமே
சனிதி மாகிய தீவினைத் தொகுதிகள் யாவும்
குனிதவி வெழுசும்பின் முற்குகுவி கூட்டமதே 72

கூடக மனக்கொடி யேனிவ் வையக
நாடகத் துழல்வது நன்மை தாங்கொலோ
மாடகித் மலரடி துணையை ஈந்தருள்
சூடக மணிமுடி விகன சையெனே. 73

நோமரு ளிவ்வுல காசையை அகற்றிச்
செய்ய அன்பர்கள் சேவடி சிரத்தினில் இருந்தா
னாகினேன் வீட்டிடை மேவுநா ளுனதோ
துய்ய னேவிக னாரிய னேயெழிற் சுடரே ! 74

வெழிலுறு மணிமுடி விகன சென்னனை
செழிதறு மலர்க்கணால் நோக்கி சேயனேன்
பொதிதரு ஞானம்மாம் பால்பு கட்டலா
கழிதரு பிறப்பினேன் களித்த வாறதே 75

களிதரு மகவுயிர் காக்கும் அன்னைதான்
விளிதல்செய் கூபத்தின் விழாதெ டுத்தல்போல்
ஒளிமுக விகனசாம் யோக மாதவன்
எளியனேன் பவம்புகா தெடுப்ப துண்மையே 76

எடுத்துனை புரந்துமற் றெம்பிரா னார்க்குமாட்
படுத்துநம் விகனசாம் பரம மூர்த்தியை
அடுத்து நீ வாழ்ந்திலை அசடர் நட்பையும்
விடுத்திலை யென்கொல்மேல் வினையு நெஞ்சமே 77

வினைபயில் கரிந்திடா விதம்பை காரெனக்
கனைதலி னழும்மலம் காய வாடிடா
தெளியன்மீ தருள்பொழிந் திடுவ துன்பரம்
வளையமர் கரவிக னாரிய மன்னனே 78

மன்னிய வுயிரும்வான் பொருளு மன்னையும்
துன்னிய தந்தையும் துணையும் செல்வமும்
சென்னியா விறைஞ்சிடு தேவும் வேறிலை
மன்னிய மணிநிகர் விகன சையனே ! 79

நிகரிலா வருள்மழை பொழியும் நின்மல
விகனச குருவெனும் மேகம் கண்ணுறில்
துகளரு மன்பராம் தோகை மஞ்ஞைகள்
அகமகிழ்ந் திறைங்சியே யாட லுண்மையே 80

[வேறு]

மையென இருண்டகுழல் மாதர்க்ள் மயக்காற்
செய்தவ மிழந்துதிரி தீயனை யளிப்பாய்
துய்யவி னாரிய தனிச்சுருதி கூறும்
பையர வமர்ந்தபர னைப்பரவு தேவே 81
பரவரிய செய்யவன் பரிந்தமணி மார்பன்
விரவுபுகழ் மேதினி விளங்கவிதி செய்த
குரவன்விக னாரின் குணக்கடலென்னுள்ளத்
திரவுபக லின்றிஇனி தாயுறைவனின்னே 82

எனக்கரிய பேறென வெழிற்கமலை மார்பன்
மனக்கய மெழுந்துபெற ஞானமது மல்கி
இனத்தவ ரளிக்குல மென்பறவை மொய்ப்ப
வனத்தவிக னாரியமரைமலர்கண் டேனே! 83

கண்டவிட யாதியிற் கருத்து நின் மறுக்கு
ழெண்டவவை கானச னெனக்கருள் செய் வானால்
மண்டவனல் வீழவருந் தும்குழவி தன்னை
அண்டயம ரன்னைதடுத் தாதரிக்கு மாறே 84

ஆதரமென் னும்மலகை ஆடுமுடறன்னைப்
பூதரமெ னக்கருது புந்தியனை ஆள்வாய்
மாதுறவு பெற்றவர் மதிக்கு இனிய தேனே
கோதருவை கானச குலத்தினி விளக்கே ! 85

தனியகமென் னும் மகலிற் சாந்தமெனும் நெய்பெய்
நினியவிவே கத்திரியி னுச்சியினி லங்க
புனிதவிக னாகிய டர்ப்பொலிய வெற்றி
துனிதருமஞ் ஞானவிரு ளைத்துறப்ப ரன்றே 86

துறக்க னிறயம் புரையு மென்றுனியே துன்னார்
சிறக்க விகனா முனிவன் சிரருளடைந்தே
அறக்கரிய கண்ணனடி அம்புயம் விழைந்து
பறன்மல மாமிருள் பரித்தவ் வரனன்றே 87

அன்றுமுத லின்றள வகத்தில்நினை நாடி
நின்றுகண்கள் நீருதிர நெஞ்சுருகி லாத
என்றனையும் ஆளுவைகொ லோவினையில் லாத
குன்றனைய நற்குணவை கானசர்கள் கோவே 88

கோகனக மெழுகன் குளிர்ந்தகய லேகண்
மாகனக மேவடிவம் மாணுமலர் மங்கை
வாகனக மார்பனடி மன்னிமகிழ் வீவில்
யோகனக மென்னும்விக னார்யனையுன் னீரே! 89

உன்னுமதி காரிகளுக் கோங்கருள்செய் யானோ
மன்னுதிரு மார்பனதி காரமரு வாத
யென்னைவிக னாரியனின் இன்னருள்செய் யாது
முன்னியவர் கட்கருளின் யான்முயல்வ தென்னே 90

அறுசீர்விருத்தம்
[வேறு]

என்னை யடையு மாயை யிடரைத்
தவிர்க்க வகையறியா

துன்னை யடைந்தும் யொழிக்கா
திருந்தா லுனக்கென் பெருமையதாம்
தென்னை யடருங் கமுகவை சூழும்
சீரார் நறையூர்க் கோபாலா
அன்னை யனையாய் விகனசெனும்
மரசே தவத்தோர்க் கமுதமே 91

தந்தம் மதியார் பலபிதற்றும்
சமையர் நெறியைத் தழுவாதே
உந்த னடியே தஞ்சமென
வுவந்து வந்தேற் கருள்வுரிவாய்
செந்தா மரைகள் மல்குதடம்
திருவார் நறையூர்க் கோபாலா
எந்தாய் விகன செனும் அமுதே
யெழிலார்ந் திலங்கு மாமணியே 92

மணியார் புன்னைப் பூம்பொழில்கள்
மல்கு நறையூர்க் கோயிலுறை
அணியார் கமலை மகிழ்மார்பத்
தண்ணலபிப்பங் கயத்திணையை
பணியா நிற்கும் விகனசெனும்
பரம குருவே பாற்சுவையே
பணியார் பிறவிக் கட்டறுப்ப
அருட்பே றடைவ தெந்நாளே 93

என்னா யகமே தவப்பேறே
யிலங்கு முனிவர் சிகாமணியே
பன்னாள் மறையந் தத்தொளிரும்
பரமர் பழிச்சசும் பாக்கியமே
பொன்னார் மதில்சூழ் திருநறையூர்
கோயில் பொலியும் தினமணியே
அன்னாய் விகன செனும் ஆரா
அமுதே யெனக்கருள் செய்குவையே! 94

வையயத் திலகு புலவீர்காள்
மனிதாப் பாடி வரும்செல்வம்
ஐய மெனவே நன்கறிந்து
மலரைப் பாடி லென்பயனாம்
மையார் மஞ்சு தவழுமதில்
மருவு நறையூர்க் கோயிலமர்

கையா வழுத விகனசனை
பாடீ ருயர்வான் காண்பீரே! 95

காணார் நின்னைக் கன்டவன்பர்
காயும் பிறவி யெனவறிஞர்
சேணா றமரர் புகழ்வ ரெனில்
சிறியேன் றுதியுந் துதியாமோ
ஆணா யகமே குணக்குன்றே
யருட்கோர் கடலே ஆணிமுத்தே
மாணார்ந் தொளிருந் திருநறையூர்
மன்னும் விகனா முனிவரனே 96

வரனை விடுத்து மற்றொருவர்
மார்பு விழையும் காரிகைபோல்
பரனை விடுத்துற் றுன்பால்
உறையா திகற்கென் செய்கேனோ
சிரனான் மறையும் தேடரிய
திருமா லுறையும் திருநறைக்கண்
கரனான் குடனே நன்கமர்ந்த
கண்ணேவிகன செனும் கரும்பே 97

ஏரார்ந் திலகு சிறுதீபம்
இனிய வளியால் அசைதலெனத்
தாரார் சூழல்மா தர்மயக்காற்
சலிக்கு முளமென் செய்கேனோ
காரார் சோலைத் திருநறையூர்
கவின்செய் கோவில் வீற்றிருக்கும்
சீரார் விகனசெனும் நாமத்
தேவே தெவிட்டாச் செழுந்தேனே! 98

தேனார் நறிய மலர்மங்கை
சேரும் மணிமார் பன்னமரும்
வானா ரமரர் துதித்திரஞ்சு
வளங்கூர் பதிகள்தொறுமருவெங்
கோனார் விகன செனும்குருவைக்
குறைவற்றோ னிரும் மாமதியைக்
கானார் சோலைத் திருநறையூர்க்
கவின்கோ யிற்கட் கண்டேனே! 99

தண்ணார் கரும்பும் கதலியுமெங்கு
கதிர்ச்சா லியும்நீர் நறுமலரும்
நண்ணா நின்ற வயல்புடைசூழ
நறையூர் கோயில் நண்ணியபின
பண்ணார் மொழியெம் பிராட்டினையும்
பரந்தா மனையும் பணிந்தேத்தும்
தண்ணார் கருணை விகனசெனும்
தவனே அருளெற் குறும்சீரே

மறைநா டரிய திருமாலின்
மனத்திற் றோன்றி விகனசனும்
நிறைமா தவத்துக் குருபரமாய்
நிகழ்த்தும் திருநூற் றந்தாதி
முறையாய் உணர்வோர் கேட்போரும்
முன்னிய சூழம் இப்புவியில்
குறைவில் போகம் பலநுகர்ந்து
கோதில் வானம் அடைகுவரே!

பங்கய மங்கை யமர்ந்திடு மார்பன்
பரிந்து மகிழ்ந்திடு நாள்
பல்கலை நன்குணர் வேதியர் நான்மறை
பள்ளி யிறைஞ்சிடு நாள்
கொங்கலர் நைமிச மாவன மாதவர்
கூருணர் வுற்றிடு நாள்
கோதில்வை கானச மாவிதி யேவிதி
என்று குறித்திடு நாள்

பொங்கு தரங்க நெடுங்கடல் சூழ்புவி
புண்ணிய மோங்கிடு நாள்
புன்சம யத்தவர் வாத மொழிந்து
புகழ்ந்து மிறைஞ்சிடு நாள்
மங்கல விகனச தேசிகன் மேதினி
மன்னி யுதித்திடு நாள்
மதிநிறை பூரணை யாவணி யிற்றிரு
வோணத் தனி நாளே!

சீரார்ந்த செங்கமலத் திருவடிகள் வாழியே!
திருவறையிற் சாற்றியசெம்பொன்னுடை வாழியே!
தாரார்ந்து நூலணிந்த தடமார்பும் வாழியே!
தனிமலைபோ லிலங்குதிருத் தடந்தோள்கள் வாழியே!

ஏரார்ந்த நிறைமதிபோ லிலங்குமுகம் வாழியே!
என்றுமருள்பொழியுமிரு திருவிழிகள் வாழியே!
நீரார்ந்த மணியொளியை நிகர்வடிவம் வாழியோ!
நிமலவிக னாரியனார் நீடூழி வாழியே!
நாரணன்றாள் வாழ்க நறியமல ராள்வாழ்க
ஆரணங்கள் வாழ்க அறம் வாழ்க - தாரணியில்
மன்னுமடி யார்வாழ்க வாழிவிக னாமுனிவன்
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

மங்களானி பவந்து.